# சுதந்திரம்



இ.ஜெ.ஜெபக்கோன்

758

# சுதந்திரம்

இ. ஜே. விஜயக்கோன்

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு

வெளியீடு - 18

சுதந்திரம் – இ. ஜே. விஜயக்கோன்
(கவிதைத் தொகுதி)

வெளியீடு – தமிழ்த்தாய் வெளியீட்டகம்

முதற்பதிப்பு – கார்த்திகை 1993

அட்டை ஓவியம் – தயா

பதிப்பு – மாறன் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை – ரூ 2€80

# சமர்ப்பணம்

எதிரியின் வெறித்தனம் கிளாலியில்
கடலேரியும் சிவந்தது குருதியில் -அதில்
நம்முறவுகள் ஆயிரம் சங்கமம் - அவர்
நினைவாய் இதுவே சமர்ப்பணம்.

*நன்றி!*

# பதிப்புரை

சுதந்திர தாகமும் – தாயகப்பற்றும் கொண்ட நூறு கவிதைகள் இந்த நூலிலுள்ளன.

தமது உள்ளத்தில் எழுந்த விடுதலை விருப்பை, தமிழீழத்தின் தேசியத் தலைவர் மீதெழுந்த பெரு மதிப்பை, தான் காணவிரும்பும் உயிரினுமினிய தமிழீழத்தை திரு இ. ஜே. விஜயக்கோன் இங்கே கவிதைகளாக வடித்துள்ளார்.

இவற்றைத் தொகுத்து நூலுருவாக்கி வெளியிடுவதில் தமிழ்த்தாய் வெளியீட்டகம் மகிழ்ச்சியடைகின்றது.

விஜயக்கோன் அவர்கள் ஏற்கெனவே அறியப்பட்ட ஒரு கவிஞரல்ல; ஆனால் அவர் ஏற்கெனவே அறியப்பட்ட ஒரு தேசப்பற்றாளன். பல வருடங்களாக முல்லை மாவட்ட மண்ணில் வாழ்ந்துகொண்டு, இந்தப் போராட்டத்தையும், போராட்ட சக்திகளான புலிகள் இயக்கத்தையும் – அதன் தலைமையையும் ஆழமாக நேசிப்பவர். அத்துடன் தன்னால் முடிந்தளவுக்குப் போராட்டப்பணிகளிலும் பங்குகொண்டவர்.

இந்தவகையில், செயல்திறனுள்ள ஒரு தேசப்பற்றாளனின் உள்ளத்திலிருந்து உதித்த உண்மை உணர்வுகள் சுதந்திரம் என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொகுப்பாக உருவாகியுள்ளதையிட்டு, தமிழ்த்தாய் வெளியீட்டகம் பெருமையும் – மனநிறைவும் கொள்கின்றது.

இந்த நூல் எமது வெளியீட்டகத்தின் பதினெட்டாவது வெளியீடாகும்.

தமிழ்த்தாய் வெளியீட்டகம்
15 - 11 - 1993

# இது முன்னுரை அல்ல...
# முகவரி மட்டுமே!

இதுவரை என்கண்ணால் காணாத நண்பன்
விஜயக்கோனின் கவிதைகளுக்கு
முன்னுரை எழுத அமர்ந்துவிட்டேன்.
ஒருமுறைகூட விழிகளால் தரிசிக்காதவரை
எப்படி நண்பன் என்று விளிப்பது?
"சூடிக் கொடுத்த ஆண்டாளுக்கு"
கண்ணன் கற்பனைக் காதலனாக முடியுமானால்.....
பாடிக் கொடுக்கும் எனக்கு
விஜயக்கோன் தோழனாக முடியாதா?
ஒருகலைஞனின் படைப்பைப் பார்த்து,
ஒருகவிஞனின் கவிதையைப் படித்து,
அவனை அறியமுடியாதா?
அவனை அளக்க முடியாதா?
ஏன் முடியாது?
அவனின் உருவத்தைக் கூட......
படைப்பின் மூலம் பார்க்க முடியுமே.
"உள்ளத்தில் உண்மை ஒளியும்",

செல்லும் வழியில் தெளிவும்.
வழிகாட்டும் தலைவனின் அளவற்ற காதலும்,
எல்லோரையும் நேசிக்கும் பண்புமுள்ளவன்
நெஞ்சை விரித்து நிமிர்ந்துதான் நிற்பான்.
அச்சமில்லாத அவன் விழிகள்
அகல்விளக்குச் சுடர்போல பிரகாசிக்கும்.
ஒட்டி உலராத பரந்தமுகம்
மறுபடியும் பார்க்கத் தூண்டும்.
நண்பன் விஜயக்கோனை
இப்படித்தான் அறிந்தேன்.
அளந்தேன்
படைப்புக்கள் மூலம் பார்த்தேன்.
பின்னர் தம்பி ரவி
இவரின் நிழற்படத்தை நீட்டியபோது
பார்த்துப் பரவசப்பட்டேன்.
ஏன் தெரியுமா?
நான் நெஞ்சில் வரைந்திருந்த கோலமே
நிழற்படமாகச் சிரித்தது.
என் கணக்கும், கற்பனையும் பொய்யாகிப் போகவில்லை.
மணலாற்று மண்ணிலே... ..
பாதம் பட்டாலே...... பலம்வரும்.
அந்த மண்ணின் மரங்களுக்குக் கீழே
குந்தியிருந்தாலே... கோழையும் வீரனாவான்.
நாயாற்று வெளியில் முளைக்கும்
நாணலுக்குக் கூட நரம்புகள் முறுக்கேறும்,
அலம்பில் காட்டின் பிரண்டைக் கொடிக்கும்
சிலம்பம் பழகும் ஆசைவரும்.
வீசும் காற்றுக்கும் மீசைமுளைக்கும்.
'மணலாறு அனலாறு' என்று
எதிரிகூட எழுதி வைத்துள்ளான்.
நாய்க்குப் பயந்தோடிய முயல்கூட
பண்டார வன்னியனின் எல்லைக்குள் புகுந்ததும்,

எதிர்த்து நின்றதாம்.
இது பழைய கதையல்ல...
பாரதப் படைகள் இங்கிருந்தபோது
நடந்த புதுக்கதை.
வன்னி மண்ணிலிருந்துதான் எங்கள் தலைவன்
வரலாறு படைத்தான்.
இந்த வீரம் விளையும் மடியே
விஜயக்கோனுக்கு புகுந்தவீடாம்
புகுந்தவீட்டின் வீரம்
இவரின் நரம்புகளெங்கும் பாய்கின்றது.
அழகுணர்ச்சி அற்றுப் போய்விட்டதோ?
என்று அஞ்சுமளவுக்கு
வீரம் இவரது படைப்புக்களில் விளைந்து கிடக்கிறது.
இருந்தாலும்
விஜயக்கோனின் கவிதைகளின்
அடிவேருக்கு இன்னும் உரம் தேவைப்படுகின்றது.
ஆனால்......
கண்ணெதிரே நிகழும் கொடுமைகளைக் கண்டு,
தன்னினத்துக்கு வந்த இழிநிலையைக் கண்டு
உண்மை மனிதன் சும்மா உட்கார்ந்திருக்க மாட்டான்,
தான் அடிமைப் பட்டிருப்பதை அறிந்துகொண்டு
உள்ளே கவிதா நெருப்பெரியும் ஒருவன்
கைகட்டி நிற்க மாட்டான்.
விஜயக்கோனும் கைகட்டி நிற்கவில்லை.
வீரம் விளைந்து கொள்ளும் எங்கள் தலைமுறையைப்
பாடத் தொடங்கிய பாவலன் இவன்.
இலையான் கலைக்க மட்டும் கைகளை அசைத்த
தமிழனை
எதிரியின் முகத்தில் குத்தவும்

உன்னால் முடியும் என்று
வீரியம் கொடுத்தது எங்கள் விடுதலைக்காற்று.
உணர்வற்று உறங்கிய எங்கள் நரம்புகளில்
உணர்ச்சிவர ஊசிபோட்டான் எங்கள் தலைவன்.
எழுந்து நடப்பது எப்படி என்று
பாடம் சொல்லித் தந்தான் எங்கள் படைத்தளபதி.
பிரபாகரன் என்ற அந்த பெருநெருப்பை
எழுதிய பாடல்கள் எல்லாவற்றிலும்
நண்பன் விஜயக்கோன்
சிம்மாசனம் கொடுத்து உட்காரவைத்துள்ளார்.
தொடர்ந்தும் நீண்டகாலமாகத்
தமிழைப் பாடுகின்றோம் என்பதற்காக
ஒருவனுக்குத் தகுதிவராது.
இனத்தின் விடிவுக்கான இருள்கலைப்புப் போருக்கு
இவன் என்ன செய்தான் என்பதைவைத்தே
காலம் ஒருவனைக் கணக்கெடுத்துக் கொள்ளும்.
தானோ, தன்பிள்ளைகளோ, தன்குடும்பமோ?
இந்தப் போராட்டத்தினால்
எந்த நோவும் நொந்தறியாமல்......
நீண்டகாலமாக தமிழைப் பாடுகின்றேன் என்பவனை
நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகின்றது.
மகாகவி பாரதியையும்
உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனையும்
தமிழைப் பாடியதற்காக மட்டும்
உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை.
விடுதலைப் போருக்கு இவர்கள் விருந்துவைத்தார்கள்,
அதிகவிலை கொடுத்தார்கள்.
தங்களை உருக்கி விடுதலைக்குத் தகுதி சேர்த்தார்கள்
ஆகவேதான் இவர்கள் அங்கீகரிக்கப்பட்டார்கள்.
இந்த உண்மையைச் சிலர் அறிந்துகொள்வது அவசியம்.
விஜயக்கோன் இந்த உண்மையை உணர்ந்துள்ளார்.
விடுதலைப் போருக்கு இவர் வழங்கும் வெளிச்சம்
வெளியே தெரிவதில்லை......

குத்துவிளக்குத் திரியாக இவர் எரிவதால் .....
அறிந்தவர்களுக்கு மட்டும் அறிந்தவராக இருக்கின்றார்.
சுதந்திரமே தன் மூச்சாகவும், பேச்சாகவும் வாழ்கின்றார்.
இதனால் இவருக்குப் பாட்டால் வரும் பெருமையிலும்
பார்க்க
பங்களிப்பால் வரும் தகுதியே தகமையாகின்றது.
நண்பர் விஜயக்கோன்
விடுதலைநெருப்பில் கூதல்காயும் வித்தை தெரியாதவர்.
ஆறுவரிகளில் நாலு கவிதைகள் எழுதிவிட்டு
நாளைய தினம்
சுதந்திரம் கிட்டுமென்று சும்மா இருப்பவரல்லர்.
விடிவுக்கான போராட்டத்தின்
அடிமுடிகளைத் தேடிவிட்டு
காணவில்லையே என்று கவலைப்படுபவருமல்லர்.
"முன்னூறுவருட முதுகுக்கூனலை"
இன்றேனும் நிமிர்த்திவிட வேண்டுமென்று
நெஞ்சு நிறைந்த கனவோடு வாழ்பவர்.
பார்க்கும் பொருள்களிலெல்லாம் பரம்பொருளைப்
பார்க்கும்
ஒரு பக்தனைப்போல
கண்களைத் திறந்தால் காட்சியாகவும்,
மூடினால்......கனவாகவும்,
தலைவனைப் பார்க்கும் ஒருவர்.
இவரின் சுதந்திரப் பாடல்கள்
இனிவரும் காலங்களில்
அணையுடைத்த ஆற்று வெள்ளமாக
பொங்கிப் பிரவாகிக்க வேண்டுமென்று
வாழ்த்துகின்றேன்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
05.11.1993

அன்பன்,
புதுவை இரத்தினதுரை.

# என்னுரை

விடுதலை! விடுதலை!

– இது விலை கொடுத்து வாங்கும் வியாபாரப் பொருள் அல்ல.

– எமது தாயகத்தின் சுதந்திரத்திற்காக வித்தாகிப் போனவர்கள் எமக்களித்த பொறுப்பான சொத்து.

மாண்புமிகு தேசியத் தலைவர் அவர்களின் புனித பாதையில், மாசில்லாத மாவீரரின் நினைவாக, தியாகப் போராளிகளின் பணியில் நாம் வெற்றியுடன் நெருங்கிக்கொண்டிருக்கும் எமது இனவிடுதலைதான் தாயகத்தின் சுதந்திரம்.

அடக்கு, ஒடுக்குமுறைகளிலிருந்து எமது இனம் விடுதலை பெற்று சுதந்திரத்துடன் வாழ, எமது தேசியத் தலைவர் அவர்கள் தன் நலம் மறந்து தொடங்கிய தியாகப் பயணத்தால், என்னையே அறியாத ஒரு உளரீதியான உணர்வு எனது இதயத்தில் ஊற்றெடுத்தது. அவ்வுணர்வலைகள் கவிதை மலர்களாக வெளிவந்தன. அந்த மலர்களை புனிதமான தலைவர் அவர்களின் பாதங்களில் காணிக்கையாக வைத்து ஆசிபெறப் பூசிப்பதற்கு எனக்கு ஆதரவும் சந்தர்ப்பமும் ஊக்குவிப்பும் அளித்த, எமது விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவினருக்கு, நான் என்றும் நன்றிக்கடன் உள்ளவனாகவும் உறுதி, விசுவாசம் கொண்டவனாகவும் இருப்பேனென தாய்மண் மீது ஆணையிடுகிறேன்.

**“தாயகத்தின் மண்ணே தமிழினத்தின் கண்ணாம்”**

**இ. ஜே. விஜயக்கோன்**

# ஈழமானதே!

நாளை இந்த ஈழம் ஆளும்
இளைய கரங்களே - தமிழ்
இனிய கரங்களே
வெந்தமண்ணில் சிந்தும் ரத்தம்
வேங்கையானதே - வீர
வேங்கையானதே!

நற்கனிகள் கொடுத்த தோட்டம்
கருகிப் போனதே - அழிந்து
தன்னை ஈந்ததே
புலிகள் தியாகம் சொந்த மண்ணில்
ஈழமானதே! - தமிழ்
ஈழமானதே!

கலையா உறுதி அண்ணன் தந்த
தேட்டமானதே - நெஞ்சின்
அலைகளானதே
எதிரி முயன்ற விலங்கை உடைத்த
நாடுமானதே - தனி
ஈழமானதே! தமிழ் ஈழமானதே!



2155

# எங்கள் தாயகம் பிறக்கும்

தமிழ்ப்பாசம் எம்மேலே கவசமானது
எதிரிகளின் பாசறைக்கு யமனுமானது
தமிழ்த்தாயின் சரித்திரத்தை புரட்டிப் கையில் - புலி
தாய்நாடு காக்கும்புகழ் புவியெங்குமே பாயும்!

பூங்காற்றும் எம்மண்ணில் தடையின்றி வீசும்
செங்கதிரவனோ தடுப்பாரின்றி ஒளிதந்துமே ஓங்கும்
இயற்கை என்றும் எமக்கெதிரி ஆகவில்லையே
இங்கு இனவாத அரசாலே எழுந்த தொல்லையே!

வீரத்தலைவர் அணிகளிங்கே வெற்றிவாகை சூடும்
வீழ்ந்த வேங்கையெல்லாம் இங்கு விருட்சமாக மாறும்
கொடியவனின் கொதிப்பு கொஞ்சநாளில் மறையும்
தமிழன் தேசக்கொடியும் கோட்டைமேலே அசையும்

உதிக்கும் திசைநோக்கும் உயிராகிப் போவோம்
உறவிழந்த எம்மினத்தின் உரித்தாகி நிலைப்போம்
கானகமும் காட்டாறும் கைகொடுக்கும் காலம்
காரிருளும் நீங்கி எங்கள் தாயகம் பிறக்கும்!

# ஓங்கிடும் ஈழம்

களப்பலியாகும் கரும்புலி யாவும்
இறப்பது ஒன்றை சிறப்பெனக் கொள்வர்
தாமழிந்தாலும் தாயகம் வருமென
தாய்மண்ணில் தாமும் காற்றோடு கலப்பர்!

மில்லரின் வழிதனில் மிஞ்சியோர் இருக்கையில்
தொல்லைகள் யாவுமே சொல்லாது மறையும்
எதிரியின் பாசறை இனியெங்கு தோன்றினும்
கற்பனைக் காற்றென கலைந்துமே மறையும்!

போராட்டச் சுழலின் சக்கரம் கரும்புலி
தாகத்தை அவன்தீர்த்தல் தாயக மந்திரம்
உலகமே வியந்திடும் புனிதரின் உயிரில்
உருப்பெற்று ஓங்கிடும் தனித்தமிழ் ஈழம்!

சாவினைச் சுமந்துமே விரைந்தனர் களம்தனில்
இறுதிநாள் அறிந்தும் எழுந்தது உறுதி
எத்தனை பலம் அதுஎத்தனை துணிவு
எண்ணியும் பார்க்கையில் எம்மனம் விம்மும்!

கடலென்ன! கரையென்ன! காற்றினில் மறைந்தென்ன
கரும்புலி கண்பட்ட கயமைகள் தவறா
செந்தமிழ் சிறக்கும் எம் இந்தமண் உயரும்
மன்னன் பிரபாவின் துணிவதில் வீசும்!

# போராட்டப் போலிகள்

போராட்டம் என்று சொல்லி
பேயாட்டம் தாம் ஆடி
பாழாக்கி நாட்டை விட்டு - பின்னர்
பகைவனுக்கு பாமாலை பாடினரே!

கட்டுப்பாட்டை களைந்தெறிந்து
களத்தின் பெருமை காணாமல்
காடையராய் அலைந்திங்கே
காட்ட நின்றார் 'போர்' கயவர்!

ஒரு துளி குருதியேனும்
தம் உடம்பால் சிந்தாமல்
குருதி சிந்தும் எம்மவர்க்கும் - கொடும்
வார்த்தை தர முயன்றனரே!

தமிழீழ மண்மேலே - எம்
தாயகத்தின் சிறப்புணர்ந்து
விடிவு தேடும் வீரனுக்கு
இவர் என்றும் துரோகியரே!

எம் மண்ணில் வாழ்வதற்கு
எள்ளளவும் தகுதியின்றி
எதிரியிடம் பறந்தோடி - அவன்
எச்சில் இலை ஆகினரே!

# பெற்றோரும் போற்றவேண்டும்

பெற்றவனின் அற்புதத்தை - வீர
அற்புதங்கள் பெற்றவனை
பெற்றோர்கள் உடனிருந்து போற்றவேண்டும் - புனித
வேலவரின் குடும்பத்தை வாழ்த்தவேண்டும்!

சித்தாந்தம் வளர்ந்ததாலே
சிந்தனைகள் முதிர்ந்ததாலே - சொந்த
உற்ற உறவுகளை மறந்தாலும் - தியாக
பெற்றோர்கள் உடனிருந்து போற்ற வேண்டும்!

தெய்வீக மகனொருவன் - நம்
தேசத்தை ஆளுவதை
மாதவத்தால் எமக்களித்த - அந்த
பெற்றோர்கள் உடனிருந்து போற்றவேண்டும்!

பெற்றோரின் மகிமைக்கும் - பிறந்த
தாய் நாட்டின் பெருமைக்கும்
தன்னையே தியாகம் செய்த உத்தமனை - அந்த
பெற்றோரும் உடனிருந்து போற்றவேண்டும்!

# தலைவனின் வழிதனை நினைப்போம்

தியாகமே நீயும் தூங்காதே
தாயகம் காக்கவும் தயங்காதே
ஆயிரம் விளக்கை அணைத்தாலும் - எம்
அண்ணனின் விளக்கை அணைக்காதே!

குருதியாய் கொட்டவும் துணிந்தோம்
சடுதியாய் சாவையும் ஏற்போம்
எம் சந்ததி விலங்கை உடைப்போம் - நாம்
தலைவனின் வழிதனை நினைப்போம்.

உரிமைக்கு உயிர்களைக் கொடுத்தோம் - எம்
இழப்பிலும் ஆயுதம் எடுத்தோம்
அடிமையின் விலங்கை ஒடிப்போம்
அதைத் தடுப்பவன் எவனையும் மிதிப்போம்!

தலைவனின் படைப்பலம் அறிந்து
தாங்காத அயலவன் எரிந்து
தடுக்க நினைத்தவன் வந்தால் - எம்
தரணியில் வாழ்வனோ நின்று!

## உறுதி!

புனிதர்கள் தியாகத்தை தாயகம் சொல்லும்
புலிப்படை வீரத்தை எப்படை வெல்லும்
தன்மானம் வேண்டிய தமிழினப் போர் - இதை
சந்ததி காலமும் வரலாறு பாடும்!

தமிழரின் குடிசையில் ஒவ்வொரு சுவரும்
இரத்தம் கொதித்ததம் சேதிகள் பகரும்
பாதையில் நிற்கும் மரங்களும் பேசும் - பெண்ணின
கற்பைப் பறித்த கொடுமையைக் கூறும்!

சூரியன் விடிவொளி வீசியே நிற்கும்
சந்திரன் தண்ணொளி தந்துமே பாடும்
விறலும் எழிலும் விண்மீது பாயும்
விடிவென்ற உரிமையில் தமிழீழம் மலரும்!

வாழ்க்கையும் வளமுடன் தொடருதல் உறுதி - இங்கு
வீரமும் விறலுமே வளருதல் உறுதி
நீதியும் நியாயமும் நிலைத்தலும் உறுதி - அதில்
வெற்றி வாகை நாம் சூடுதல் உறுதி!

## தமிழ் பாரும்!

முத்தமிழும் பார்த்திருக்கும்
முடிவு நாளில் வாய் திறக்கும்
தப்பி ஓடி வருவோரை
தண்டச் சோற்றின் ருசிகேட்கும்!

உரிமைப் போரை தலைவணங்கி - அதில்
உதிர்ந்துள்ளோரை துதி பாடும்
இன்னல் மழையில் நனைந்தவரை
இன்பத் தமிழோ புகழ் பாடும்!

எதிரி அணியில் இணைந்தவரை
எச்சில் இலையாய் வசைபாடி
எந்தத் தாயும் இவர் முகத்தை
எண்ணிப் பாராய் என வாடும்!

## விழிப்பு!

தூக்கத்தில் இருக்கும் தமிழா
துயரமும் உன்னை நெருக்கும்
ஏக்கத்தில் வாழ்ந்தது போதும் - நம்
எல்லைக்கு வேலியாய் மாறு!

வாட்டமும் அயலுக்கு இல்லை - இதன்
வருத்தமும் ஊருக்கு இல்லை
வந்திடின் உனைநாடித் தொல்லை - உன்
வீரத்தால் வெல் அவை தன்னை!

முன்னோர் விட்டதோ தவறு - இது
முதியோரும் உணராத புதிரு - இதன்
பயனாலே படுகின்றோம் அழிவு - இதை
தடுக்கவே இளையோரின் துடிப்பு!

தார்மீகத் தலைவரின் தோற்றம் - செந்
தமிழின் நிலையான ஏற்றம்
கொண்டார் மனதினில் தியாகம் - அதனால்
சென்றார் இலட்சியப் பயணம்!

# பாசமும் தியாகமும்

மாலையும் வாழையும் காட்டிடும் பாசம்
இம்மண்ணை மறந்து திரிவதோ பாவம்
தினமுமே நாடு சோகத்தில் வாடும்
கருநிழற் கொடியுமே வீதியில் ஆடும்!

காற்றிலே கலந்திட்ட காவிய மெல்லாம்
மண்ணிலே கொண்ட நற்பாசமே ஆகும்
கண்ணீரின் முடிவிலே காண்ப தொன்றில்லை
களமாடும் புலியானால் கவலை என்றில்லை!

சாவினைக் காணாத வீடுகள் உண்டோ
சந்ததி வாழ்வில் இவ்விலங்குகள் நன்றோ
சொத்துகள் சேர்த்தோம் நாம் பரம்பரைக்கென்று
சொந்த மண் இழப்போடு சேர்ந்தன இன்று!

மக்களின் கவசமாய் புலிவீரர் உண்டு - இந்த
மண்ணையும் கொஞ்சம் நாம் சிந்திப்பதுநன்று
பலியாக கொடுக்கும் கடாக்களா புலிகள்
நெருப்பாறு கடப்போரால் தப்பியதே எம் நிலைகள்!

## உயிராக மாறு!

இருள் விடிந்தாலும் விடியாத நாடெனில்
இங்கு வாழ்ந்தாலும் பயனேது கேளு
வந்து பிறந்தாலும் புலியாக மாறு - இதில்
தமிழ் நாடொன்று உருவாக்கப் பாரு!

கருவானபோதும் சிறையான வாழ்வாம் - காளை
வயதான போதும் நலிவான வாழ்வோ?
உருவான துயரங்கள் உருமாற வழிகாண்
உன்போன்ற தோழர்க்கு உயிராக மாறு!

தாலாட்டோ தமிழாலே கேட்டாய் - பெற்ற
தாயென்று நாடதனை காப்பாய்
வீரம் இல்லையென்று நீயிங்கு சொன்னால்
தமிழீழ நாட்டிற்கும் ஈனமிங்கு உன்னால்!

கஞ்சி குடித்தாலும் கரும்பாக இனிக்கும்
பஞ்சி பசிகூடப் பஞ்சாக பறக்கும் - இதை
நெஞ்சிலே ஏந்திநீ துணையாவாய் இன்று
நாளை பிறந்து வரும் தனிநாடு ஒன்று!

# இப்படியும் உள்ளனர்!

எதிரியைப் பார்த்து வாழ்த்துக்கள் கூறும்
எம்மின எருமையும் இருக்கிறானப்பா
என்றைக்கோ இவனும் தமிழனென வாழும்
பொற் காலமொன்று பிறக்காதோ அப்பா!

வாழையிலை விருந்து எமக்கெல்லாம் களிப்பு - அங்கே
எச்சிலிலை விருந்தே அவனுக்குக் களிப்பு
இதைஐயோ பெருமையாய் எண்ணியவன் கொஞ்சம்
இருப்பதை நினைத்தால் வெடிக்குது நெஞ்சம்!

வாலறுந்த நரிசில வவுனியாவில் இருக்கும்
வரலாறு சரியானால் அது சவக்கிடங்கில் விழிக்கும்
தமிழனென்று சொல்ல தாய்மண்ணே வெறுக்கும்
தாயுள்ளம் இவனை தனதென்றா ஏற்கும்!

போருக்கு போவதாய் வேசங்கள் போட்டான்
யாருக்கும் தெரியாமல் கொள்ளை அடித்தான்
வல்லரசு நாட்டானுக்கு வாலாட்டி நின்றான்
சிங்களவன் காலை செருப்பாகச் சுமந்தான்!

# தாயினைப் போன்றது

வாய்மையில் வென்றவர் பலபேர்
அதன் வழியே நீயும் செல்வாய்!
சாவு என்பது உன்னோடு பிறந்தது
தாயகம் அன்றோ உன்தாயினைப் போன்றது!

பிறந்ததில் இருந்து இறப்பது வரைக்கும்
பயந்து வாழ்வதில் பயனேது உனக்கு
தாய்தந்த வீரம் நரம்போடு இருக்கும்
நாளைய தலைவர் நாமெனக் கொள்வாய்!

உன்மண்ணில் உறங்க உனக்கேன் நடுக்கம்
இங்குநீ தங்கி உழைப்பை மேற்கொள்வாய்
அலைந்து திரிந்து அகதியாய் வாழ்வதில்
அருமை அண்ணன் அணியுடன் சேர்வாய்!

அன்னை பூமியை அறவே மறந்து
அல்லும் பகலும் அந்நியர்க் குழைத்தாய்
தாய்மண்ணின் வாழ்வினை வளத்தினை பெருக்கிட
தங்கிடின் தன்னிறை வெய்தல் நீ காண்பாய்!

# புனிதங்கள் நிறைந்திருக்கும்

வேதனையில் நாம் வாழ்ந்தும்
வெந்த மண்ணை மறக்கவில்லை
சாதனைகள் பல புரிந்தும்
சாவில் புலி கெலிக்கவில்லை!

பிறப்பிருந்தால் இறப்பிருக்கும்
இறப்பில் பல சிறப்பிருக்கும்
மண்மீட்பில் இறப்பவர்கள் - மா
வரலாறு படைத்தவர்கள்!

துன்பச் சுமை நிறைந்திருந்தும்
நெருப்பாறைக் கடப்போம் நாம்
இருளதனை கடந்ததினால்
ஒளியொன்றில் வாழ்வோம் நாம்!

புலி செல்லும் வழியெங்கும்
புனிதங்கள் நிறைந்திருக்கும்
புதுயுகத்தை அமைப்பதற்கு
புலி அணியில் சேர்வோம்நாம்!

# கீதம் ஒலிக்கும்

துன்பப் புயலும் வீசி ஓயும்
இன்னல் வாழ்வு நிம்மதியாகும்
அன்னை பூமி அழுத கண்ணீர்
அண்ணன் பாதையில் அமைதியைக் காணும்!

எங்கள் மண்ணை மீட்டு எடுப்போம்
எதிரி தொல்லை எளிதில் முடிப்போம்
ஈழம் இசைக்கும் கீதம் ஒலிக்கும்
இந்த மண்ணில் புலி பல பிறக்கும்!

வீட்டுக்கு வீடு வேங்கைகள் வேணும்
வீரர்கள் தளமதை பலமாக்க வேணும்
பச்சை இரத்தம் பாய்ந்த பூமி
பிரபாவின் ஒளியால் புதுயுகமாகும்!

# பழி சுமக்கும் சிங்களம்

சிறீலங்கா என்றும் கொலைக்களமே - இது
சிங்கள வெறியரின் தலிக்குணமே
கறைகளே படிந்த கைகள் அங்கே - அது
காலங்கள் போனாலும் கலையாத நிலையே!

கோடரிக் காம்புகள் துண்டாகிப் போனாலும்
தொடர்ந்து நடப்பதும் குள்ளநரிகளின் செயலே
அறமென்ற ஒன்றை அறியாத இனமாம் - தம்
அழிவையே வேண்டி குழிதோண்டும் சனமாம்!

சிங்கள இனமும் சிதறிய நிலையாம் - அவர்
சந்ததி விதைத்த வினையதன் பயனாம் - இதை
உணர்ந்தவன் ஆட்சியில் இருந்ததே இல்லை
புரிந்தால் பறந்திடும் தமிழினத் தொல்லை!

தார்மீக முகமூடி அத்தலைவர்கள் முகத்தில் - நம்
தமிழீழ கொலைகளோ அவர்களின் அகத்தில்
எம்மினத் துரோகிகள் அவனுக்குப் பணியும்
அந்நிய நாடகம் இனி நடவாது! ஒழியும்!

# எது வரின் என்ன?

குண்டு போடும் சத்தம்
நீண்டு கொண்டே போகும் - இதில்
மிரண்டு நாமும் போனால் - இங்கே
யாவும் அழிந்து போகும்.

கூண்டில் பட்ட கிளியைப் போல
தூண்டிலதன் மீனைப் போல
மாண்டு நாமும் வீழ்வதோ சொல்
மனிதர்களாய் வாழ்வதோ சொல்!

அண்ணன் காணும் முடிவு யாவும்
அச்ச மிலா நாடு ஆக்கும்
இழிந்து ஏங்கி வாழ்ந்த காலம்
இனிமேல் இல்லை எம் மண்மீது!

ஆறில் என்ன நூறில் என்ன
சாவு நம்மை நெருங்கின் என்ன
வீறுகொண்டு வாழும் எம்மை
வீரர்எம்மை விரட்டுவோர் யார்?

# பெருமை நினைவுகள்

பாட்டன் தமிழும் நெஞ்சிலிருக்கு
பகைவன் படையை அழித்திருக்கு
நாட்டைப் பறிக்க நாட்டமிருந்தால் - எதிரி
ஓட்டம் போட்டு வந்திடட்டும்

அம்பு வில்லுக் காலம் தொட்டு
அண்ணன் காலம் இன்று வரைக்கும்
தமிழன் காணா போர்க்களம் உண்டோ - தலை
வணங்கிய கதைதான் என்றோ!

இந்த மண்ணின் தமிழ் மன்னர் சிலைகள்
கடந்த கால சரித்திரம் விளக்கும்
எந்த மன்னன் பணிந்துமே வாழ்ந்தான்
இந்த மன்னன் படைதனில் சிறந்தான்!

மூன்றெழுத்தால் எம் தமிழ் இனிக்கும்
மூன்று வேந்தர் வளத்ததால் இருக்கு - இன்று
முதுகு எலும்பாய் அண்ணன்தான் இருக்கார்
பகைவன் முட்டநினைத்தால் எட்டி உதைப்பார்!

தமிழை அழிக்க கூட்டம் இருந்தால் - அதை
தட்டிக் கேட்க அண்ணன் இருப்பார்
அவர் தங்கக்கையால் நாடு சிறக்கும்
அதன் தேசக் கொடியாய் புலி பறக்கும்!

# தோள் கொடுப்போம்

சுதந்திரம் வேண்டி துடித்தெழுந்தோம் நாம்
துன்ப அழுக்கத்தில் வெடித்தெழுந்தோம்
விடுதலை வேண்டி விழிப்புடனே நாமும்
வீர மறவராய் பிறந்து வந்தோம்!

பரம்பரை இரத்தத்தை மதித்திருந்து
பாழ்போன பூமிக்கு உயிர்கொடுப்போம்
இளைய பரம்பரை இன்பமாய் வாழ - நாம்
ஈழச் சுதந்திரத் தோள் கொடுப்போம்!

காக்கைவன்னியரால் கவலையில்லை - போர்க்
களங்கள் பல வரின் பயமுமில்லை
காக்க வேண்டுமெங்கள் தாய்மண்ணை எம்
கனவு நனவாகும் தனித்தமிழ் மண்ணை

கிழக்கு வெளிக்க - வடக்கும் நிமிர
தீர்மானம் கொண்டு வெளிவா தமிழா
நிம்மதி தேடி சும்மாவரா து - நாம்
ஆடிப்பெறவேணும் போரை விடிவை!

## ஏமாளி ஆகாதே

ஏந்தாதே கையை ஏந்தாதே
ஏமாளியாய் நீ வாழாதே
எதிரிவலை எம்மைச்சுற்றி என்றுமிருக்கும் - அதை
எண்ணிநாம் வாழ்ந்தாலே நன்மையிருக்கும்!

வளமெல்லாம் நிறைந்திருக்கும் எங்கள் நாட்டில்
வயிற்றுப்பசியால் நாம் வாடுவது சரிதானா?
போர்முனைக்கும் ஏர்முனைக்கும் மதிப்பளித்தால்
தலை நிமிர்ந்த வாழ்வெமக்கு நிலைத்திருக்கும்!

நம்காலில் நாம் நிற்கப் பழகிக்கொண்டால்
நம் தோள்கள் வலுவெடுக்கும் காலம் நமதே
நிலைதளரா தலைவனை நாம் அடைந்துவிட்டோம்
நில வளத்தை சேராக்க தோள் கொடுப்போம்!

என்ன வளமில்லை இங்கு எங்கள் திருநாட்டில்
ஏன் என்றும் எதிரி கையை எதிர்பார்ப்பான்
ஒற்றுமையாய் இறங்கிடுவோம் வயற்காட்டில் - வறுமை
ஓடி மறைந்து விடும் திருநாட்டில்!

# தந்தோம் நாம் எம் வாழ்வை

ஒளி வீசும் மெழுகுதிரி
உருகுதே தன் வாழ்வில்
தமிழீழ விடுதலைக்கு
தந்தோம் நாம் எம் வாழ்வை!

பச்சிளம் வயதினிலே - பிரபாவே
நீர் கொண்ட
உத்தம ஒளிவிளக்கை
உண்மை நாம் புலிபெறுவோம்!

பதினெட்டு வருடங்கள் - நீர்
பூண்ட கொடிய தவம்
ஒருநாளும் வீண் போகா
ஒன்ா தமிழாய் விடிவு வரும்!

# வளம் பல சமைப்போம்

தென் தமிழீழம் வடக்கோடு இணைய
வன்னியினூடே பாதையும் அமைப்போம்
தெங்கு பனம்பொருள் தென் தமிழீழம்
பாசத்தினூடே பரிமாறிக் கொள்வோம்!

காங்கேசன் சீமெந்தும் முக்கனி வகையாவும்
காகிதப் பொருளும் முத்து நெல்மணியும்
கையோங்கும் ஈழத்தில் கவின்பலநாம் கொள்வோம்!
கவலை கொளோம் கரம்சோரா துழைப்போம்
வெல்வோம்!

அறுசுவை ஒன்றெனும் உப்பையும் கூட
அனுப்பியே வைக்க தயங்கவும் மாட்டோம்
முல்லைநகர் தரும் முக்கண் தேங்காயும்
முழுஇடம் நாமும் பகிர்ந்து அளிப்போம்!

உப உணவுற்பத்தி யோடு கடலை
மரக்கறி யாவும் நிலத்தினிற் கேற்ப
அறுவடை செய்து நிறைவினைப் பெறுவோம்
செந்தமிழ் நிலமெலாம் புலியாகக் காப்போம்.

புகைவண்டி வீதி புதிதாக அமைத்து
எல்லைக்கடலிலே கப்பலும் விடுவோம்
சுதந்திர ஈழத்தில் நிரந்தர நிறைவொடு
பணியாத நாடாக பாரினில் வாழ்வோம்!

# தமிழீழம் உருவாகும்

எம் மண்ணின் சாம்பலது
காற்றினிலே பறக்காது
உரமாகும் மண்ணோடு
உருமாறும் புலியாகும்!

புதைகுழிகள் உயிராகும்
புதுப்புலிகள் உருவாகும்
புதுயுகத்தில் நாம் வாழும்
தமிழீழம் உருவாகும்!

செந்நிறத்து வானத்தில்
செங்குருதி நிறமாகும்
செந்தமிழர் இனம் வாழும்
தேன் ஈழம் அது காணும்!

நீர் நிலத்து வளத்தோடும்
நிம்மதி காண் நாளோடும்
நிச்சயம் இத்தலத்தினிலே
தனிநாடு நாம் காண்போம்!

# காலம் மாறும் நேரம்

அடிமைநோய் மாறும் சரித்திரம் - எம்
தாயகம் காணும் நிரந்தரம்
உணர்வதன் ஏற்றம் எம்கரம் - இங்கு
உயர்ந்திட வேண்டும் ஒருதரம்!

தந்தையின் வழியில் மந்தையாய்
தனயரும் வாழ்வது விந்தையே - இந்த
விலங்கினைச் சுமக்கும் வாழ்வினை - நாம்
விடியலில் மாற்றி ஒழிக்கணும்!

சிந்தனை இழந்த முந்தையர் - கொடும்
சிங்கள அரசை நம்பினர்
பஞ்சணை வாழ்வை நாடியோ - நம்
பைந்தமிழ் வாழ்வை மறந்தனர்!

நந்தமிழ் நாட்டின் கோழைகள் - அயல்
நாட்டில் தேடினர் வேலைகள் - தக்க
வாய்ப்பது பார்த்துப் பறந்தனர் - தம்
தாயக நிலையை மறந்தனர்!

# புனிதர் தந்த புதுயுகம்

சிறந்த கரத்தால் பிறந்த நாடு
சிறுவர் தரத்தால் உயர்ந்த நாடு
பிறந்த இனத்தை நினைந்த நாடு
மறவர் பிறக்கும் தமிழர் நாடு!

தடுப்போர் வழியை விரட்டி அடிப்போம்
சிக்கி மடியோம் சிலந்திவலையில்
சத்தியத் தலைவனில் நிற்கும் நாமே
நிச்சயம் காண்போம் சுதந்திர நாடு!

பட்டினி போட்டு மீட்டிடப் பார்த்தும்
பகைவன் தானும் குண்டுகள் போட்டும்
பண்புடைத் தமிழை அழித்திடப் பார்த்தும்
வேதனைக்கு அஞ்சா வேங்கையர் நாடு

பொன்னான மண்ணை அனலாக்கி வைத்து
பொறுப்பற்ற சிலரையும் தம்முடன் அணைத்து
போரிட்ட போதும் புலியாக மாறும்
தன்மானம் காக்கும் தமிழீழ நாடு!

# உடன்பிறப்புக்கள்

தமிழா! புறப்படு தமிழா!
போர்க்களமாடும் புலியுடன் நீயும்!
ஆடையிழந்து அலைவதைப் போன்றுநாம்
மானமிழந்து மறைவது முறையோ!

இளம்புலி எண்ணிலாக் களப்புலியாகினர்
இவரெல்லாமுந்தன் உடன் பிறப்பன்றோ
பரம்பரை இரத்தம் நரம்பிலே இருக்கையில்
பதுங்கியே ஓடும் தமிழனாய் நினைப்போ!

குட்டுப் பட்டாலா புத்தி பிறக்கும்
குருதி பாய்ந்தால் உறுதி நிலைக்கும்
இன்னல் நிலையிலே உணர்வு சிறக்கும்
ஈழம்காண் உனக்கு தொல்லை மறையும்!

பிஞ்சுகள் நெஞ்சிலே விடுதலை நெருப்பு
கெஞ்சியே சொன்னாலும் உனக்கில்லையோ பொறுப்பு
ஆசைகள் பாசங்கள் இன்னுமோர் தடையோ
தங்கைகள் இழப்பை நீ பார்த்தபின் உளவோ!

# படையதிலே சேரு

நாடு தமிழ் நாடு
என்ற நினைவோடு நீ வாழு
தேடு அதில் தேடு - நம்
தேசத் தலைவன் வழியில் வாழு

நாடு பெரிதென வாழும்
நம்மினத்தை வாட்டும் துயர் நீக்கி
தாயின் வழிவந்த தமிழை
நீ காக்க படையதிலே சேரு!

வீர சமுதாயம் வாழ்ந்த
நம் மண்ணை விடுதலை நாடாக்கு
நீ வென்று விடுதலையைக் காட்டு - வீரத்
தலைவன் புகழை நீ நாட்டு!

தமிழன் பெருமையோடு நீயும்
தயங்காத மறவனாய் வாழு
சுற்றி பகை வந்து சூழின் அந்த
வெற்றித் தலைவன் வழி காட்டு!

# கிளாலிப் பயணம்

குடும்பத்தின் பாரத்தால் கடலேரிப் பயணம்,
பயணத்தைத் தொடர்கையில் மனையாளின் துயரம்;
மக்களிடம் விடை பெற விம்மியவர் அழுகை;
இத்தனை துயரோடும் இக்கரை காவல்; - இவ்
வறுமையின் வாட்டத்தால் உயிரையே பணயம்
வைத்துமே செல்கையில் எத்தனை இடிகள்
மறுகரையைக் காண துடிக்குமேவிழிகள் - அன்று
நடுக்கடலில் நடந்ததைக் காட்டுமே இதயம்
சிந்திக்க வைத்தாட்டம் தந்திடும் வள்ளம்
சிலையான முகங்களில் சிரிப்பொரு புறமாம்
திரும்பியும் பார்க்கையில் காட்சியோ புதுமை
கடலலை மேலே கரிகாலன் படைகள்
எதிரியைத் துரத்தி ஏவுறார் ரவைகள்
ஏறிப்பாயும் அலை ஊடே எங்களின் பயணம்
இத்தனை உயிருக்கும் அவர்தானே காவல்.
கிலிகொண்ட பயணத்தை புலியென மாற்றும்
இப்புனிதரின் சேவையை பூசிக்க வேண்டும் - இதை
புரிந்தவன் தமிழன் புயலோடு இணைவான்;
இணைந்திடும் போதங்கு புதுயுகம் தோன்றும்!

## மறந்தவன் நிலை!

தூங்கிய தமிழன் விழிக்கட்டும்
தொடரும் வாழ்வை நினைக்கட்டும்
நாளை வளரும் சந்ததிக்கு
விடுதலை நாடுருவாக்கட்டும் உருவாக்கட்டும்!

தன்னை மறந்து தமிழன் வாழ்ந்தான்
வாழும் போது விலங்குடன் வாழ்ந்தான் - அவன்
எம் மண்ணில் பயத்துடன் ஏங்கி வாழ்வான்
எதிரியை எதிர்த்தால் புலியாய் வாழ்வான்.

அகதிமுகாம் தேடி நாயாய் அலைந்தான்
அலைந்து திரிந்து நிம்மதி இழந்தான்
இந்நிலை தொடரும் காரணம் அறிந்தால்
நிச்சயம் தனக்கொரு நாடென்று வாழ்வான்!

பிறந்த மண்விட்டு அயல்நாடு பறந்தான்
பறந்து போயும் பணந்தான் கண்டான்
சந்ததியின் நிலைஇவன் சற்றேனும் நினைத்தால்
சாவிலும்கூட தாய் மண்ணை மீட்பான்!

# புதுவிதப் புத்தாண்டு

சிறப்பாக புத்தாண்டு பிறக்கும்
சுமந்து வந்த அல்லல் தன்னாலே பறக்கும்
கரும்பான தமிழீழம் தாயகமாய்ப் பிறக்க - அதில்
தம்பியின் கனவெல்லாம் சிறப்பாக நிலைக்கும்!

தமிழ்மாந்தர் துயர் இங்கே கலைய - நம்
தமிழிங்கே தனித்தோங்கி வளரும்
எதிரியின் நிலையாவும் தளரும் - பெரும்
சிறப்போடு எம்தேசம் மேலோங்கித் தெரியும்!

களங்காணும் புலியாவும் ஆறும் - போரில்
அணையாத தாகம் அன்றேதான் தீரும்
ஒளியாக எதிர்காலம் தெரியும் - வெருண்டு
ஓடிப்போனோரின் மனம் தடுமாறும்!

செந்நிறம் மண்மேலே ஒளிரும் - அது
செவ்வான இணையாகி எம்முன்னே தெரியும்
என்றைக்கும் மண்மீட்பை எல்லோர்க்கும் துலக்கி
எதிரிக்கும் அறைகூவிப் புகட்டும்!

மாண்டவர்கள் ஆண்டதையே நினைக்கும்
மாவீரர் வரலாறோ மண்மீது நிலைக்கும் - தமிழீழம்
தனிநாடாய் பிரபாவால் பிரியும்
நாளை விடிந்தால் இது உலகுக்கும் புரியும்!

# உறவை மறந்தேன்

காடும் நாடும் எனக்கு வீடு
காத்து வந்தேன் தமிழர் பண்பாடு
தாயும் ஒன்றே தமிழும் ஒன்றே
காணப் போவதோ தனிநாடு இன்றே!

அன்னை மடியில் தவழும் வயதில்
அடிமை விலங்கை எண்ணி நிமிர்ந்தேன்
அன்று தொட்டு இன்று வரையும்
அதற்கு நானே உளியும் ஆனேன்!

நண்பகல் வேளை நண்பரோ மகிழ்ந்தார்
நானோ கோயில் தேரினில் மறைந்தேன்
ஊணை மறந்து உறக்கம் மறந்து
உணர்ச்சி மிஞ்சி உறவுகள் மறந்தேன்!

தஞ்சம் கேட்க கதவை அடைத்தார்
தாயின் முகமும் கனவாய்க் கண்டேன்.
நான் கடந்தபாதை கரடு முரடு
இதில் கண்டு முடிப்பேன் தமிழர் நாடு!

எனது பாதை இதுவே ஆகும்
இனிமேல் சமூகம் இனிதே வாழும்
மேகம் அழிந்து மழையைப் பொழியும் - என்
தேகம் அழிந்தால் தமிழே மொழியும்!

# என் மகனை ஈந்தேன்!

உள்ளமோ குமுறிடும் பிள்ளைப்பாசம்
உருக்கியே வாட்டி எனைத் தாக்கும் போதும்
உணர்வு பொங்கி மார்பதனை நிமிரவைக்கும்
தமிழனென்று சொல்லித் தாய்மண்ணைக் காட்டும்!

தந்தையென்ற உறவாலே தடுமாறும் உள்ளம்
தாயின்றி வளர்த்ததால் தவிக்குதென் இல்லம்
தமிழீழ உணர்வால்நான் தாங்கிடுவேன் துன்பம்
தலைவனது பாசத்தால் தலைமகனைத் தந்தேன்!

வீதியோரத்தில் வீராப்புப் பேசிடுவோர்
விடிவுநாள் எண்ணி ஒரு வீரர் தரட்டும்
சதிகாரப் பகைவனவன் கதைமுடியும் நாளும்
தொலைவிலிலை இதுஎன்றன் தலைவன் மீதாணை!

பேர் சொல்ல ஒரு பிள்ளை பெற்றவனா யிருந்தும்
போர் முனைகள் வென்றுவர என்மகனை ஈந்தேன்
விடியாமல் என்வீடு இருந்தாலும் கேளீர்
விடிந்தாலும் போதும் தமிழீழம் பாரீர்!

# பிறந்த நாடே
# சிறந்த கோயில்

சொந்த மண்ணையும் சொந்த மொழியையும்
எந்த நிலையிலும் எண்ணிப் பாரடா;
செத்து மடிவது ஒருமுறையென்று
செந்தமிழ் காக்க செருக்களம் பாயடா!

காட்டிக் கொடுப்பனால் கரையுமா நாடு
நீட்டிய துவக்கால் எதிரியை தேடு!
நாட்டிலே விடுதலைக் கதவு திறக்கும்
நமக்கெல்லாம் நிம்மதி தானே படைக்கும்!

அந்நியன் பாதம் எம் அன்னையை நாடின்
பாயும் குருதியில் பகைவனை வீழ்த்து
வன்னியன் பாதையில் தன்னை மறக்கும்
மரபினை இங்கே மார்பினில் ஏற்று!

# நாம் காணும் பெருமை

தம்பியும் ஆள்வதோ உறுதி - நம்
தாயகம் பிறப்பதே நியதி
தயங்கி வாழ்வதாலன்றோ அவதி
தமிழின் விடுதலைக்கு உயிரே தகுதி!

கண்களில் தெரிவதோ கருணை
அதைக் கொண்ட தலைவனின் பெருமை
வரலாற்றின் வழியிலே தெரியும் - அவர்
வாழ்க்கையும் தத்துவம் புரியும்!

தமிழரை விழிக்க வைத்தவர்
தாயகம் செழிக்க உழைத்தவர்
தன்னலம் இல்லா தியாகிதான் - நம்
மண்ணையும் காத்த மன்னர்தான்!

# தாயாக இருந்தான்

தாயகம் சிறக்க தம்பி பிறந்தான்
தரணியும் போற்ற அவன் நடந்தான்
ஏணியாய் என்றைக்கும் அவனிருக்க
எம்தேச மொழியும் தமிழாகும்!

பகைவனை விரட்டிட படைகள் எடுத்தான்
பாட்டாளி மக்களின் கூட உழைத்தான்
நாயாக அன்று அலைந்த நம்மினத்தை
சேயாக அணைக்கும் தாயாய் இருந்தான்!

வல்லையில் சிவனாய் நல்லையில் குகனாய்
வந்தவர் தம்பிதான் நமக்கெல்லாம் துணையாய்
ஏருக்கும் போருக்கும் இணையின்றி வாழ்ந்து
ஏற்பட்ட துன்பத்தை தான்நின்று தீர்த்தான்!

# முன்னைய வழிகாட்டிகள்

கதிரையை தேடி வாடிய கூட்டம்
களத்தினைக் கண்டு எடுத்ததே ஓட்டம்
இனிமையாய் என்றும் வாழ்வதே நோக்கம்
இன்பத்தமிழ் அழிந்தாலும் அவர்க்கில்லை மாற்றம்!

மேடையில் மட்டும் எமக்கு முழக்கம்
வெற்றி கிடைத்தால் நடப்பதே வழக்கம் - இவர்
வேடங்கள் என்றும் நிலைக்கவும் இல்லை
வேங்கைகள் கூடியதால் இவைக்கல்லோ தொல்லை!

வருடம் ஐந்து கழிந்ததும் வருவார்
வீட்டுக்கு வீடாய் பேயாய் அலைவார்
செந்தமிழ் பேசும் திறனும் மறந்து · தேர்தல்
தேதி முடிந்ததும் கொழும்பிற்கே பறப்பார்!

திலகத்தை மட்டும் இரத்தத்தில் இடுவார்
தித்திக்கும் தமிழுக்கோ தூரமாய் விடுவார்
காலங்கள் மாற கதைகளும் மாறும்
கோலங்கள் வேறாகி கொள்கைகள் நாறும்!

அக்காலம் பிரபா பிறந்து இருந்தால்
இக்கால இழப்புக்கள் இடம்பெற்றா இருக்கும்
தமிழீழ தாயகம் தனியொரு நாடாய்
தமிழ்மக்கள் பெற்று இனித வோழ்ந்திருப்பார்!

# நாடொன்று படைத்திடுவோம்

சிங்களவன் கொடுமைகளை
செங்களத்தில் வென்றிடுவோம்
செந்தமிழின் பெருமைகளை
நம் பலத்தால் காத்திடுவோம்!

நம் வளத்தின் சிறப்புக்களை
எம் கையால் ஆக்கிடுவோம்
ஏந்திய கை எனும்பெயரை
எம் மண்ணை விட்டே மாற்றிடுவோம்

மண் மீட்ட மறவர்களை
மா தவமெனவே போற்றிடுவோம்
மன்னர் பிரபா ஆணைகளை
நாம் மறந்திடினோ மடிந்திடுவோம்!

ஏந்தி நின்ற விலங்குகளை
எம்மினக் கரத்தால் உடைத்திடுவோம்
எம் ஈழத் தனிநாட்டை
இனிதே நாம் படைத்திடுவோம்!

# மாற்றி அமைத்தான்

ஈழத்தை ஆளுமா தமிழினம் - என
ஏங்கியே இருந்தது எம்மினம்
தூங்கிய இனமும் விழித்தது ஒரு நாள்
தாங்கிய துன்பமும் கலைந்தது மறு நாள்!

ஆண்டுக்கு ஆண்டு அழிவுகள் கண்டும்
அஞ்சியோ எம்மினம் அடிமையாய் வாழ்ந்தார்
பிஞ்சினில் அண்ணனும் ஏந்திய பாரம்
தாயகம் பிறக்க வழிகாட்டிய சிகரம்!

ஆட்பலம் கண்டு அஞ்சிய இனத்தில்
அச்சம் ஒழிக்க எழுந்தான் ஒருவன்
அன்றைய தியாகம் இன்றைய வரையும்
அஞ்சாமை கொண்ட படையதை ஈந்தான்!

நந்தமிழ் பேசும் நம்மினம் வாழ்ந்தும்
நாடென்று சொல்ல நாவில்லை இல்லை
ஏனிந்த இழிவுக்கு நம்மினம் ஆச்சு
என்றொரு கேள்வியே அண்ணன் மனமாச்சு!

# அஞ்சாத வீரர்

தம்பியை நம்பு சஞ்சலம் தீரும்
தாவிக்கொண்ட துயரங்கள் ஓடும்
எதிரியை எண்ணி ஏங்கிடும் இனமாய்
இனியும் இங்கே வாழ்வதை மாற்று!

பிறந்த மண்ணில் சிறையாய் இருந்ததை
திருப்ப ஒருமுறை சிந்தித்துப் பாரு
உரிமையின் போரிலே உதிர்ந்தவர் இழப்பை
உந்தன் மனதினில் இருத்தியே பாரு!

ஒருதுளி இரத்தம் சிந்திய மண்ணா?
குருதியே ஆறாய்க் கண்டது ஈழம்
எத்தனை உடல்கள் உரமாகிப் போயும்
எண்ணாத வீரர்கள் உதிப்பதும் இங்கே!

வெயிலில் வெந்தும் வெட்டையில் காயும்
வேங்கைகள் தம்பணி வெறுப்பாரோ கேளு
பொறுப்புகள் கொண்டு தியாகத்தைத் தாங்கும்
போராடும் வீரனின் பாசத்தைப் பாரு!

# தூங்காதே!

தூங்காதே தமிழா தூங்காதே
துவக்கைக் கேட்டும் நீ தூங்காதே
சொந்த நாட்டு மண்ணையுமிங்கே
வெறும் சுடுகாடு ஆகவிட்டுத் தூங்காதே!

எதிரி வரவை எண்ணி ஏங்காதே
எல்லை தாண்ட எளிதில் ஏலுமோ?
ஏனிந்தத் தியாகிகள் எல்லை காக்கிறார்
என்ற கேள்வியை நீ எண்ணிப்பார்க்கிறாய்!

அந்நியன் ஆண்டுவந்த அந்தக்காலம்
அழிவுகள் தந்ததே இந்தக் கோலம்
அதனால் எழுந்தது தமிழ் ஈழத்தாகம்!
அது அண்ணன் இதயத்து உயிர் வேகம்

கைகட்டி நின்று விடிவைப் பாராதே
காலத்தைத் தாழ்த்தி இனத்தை அழியவிடாதே
குண்டுக்கு அஞ்சி நீ கோழை ஆகாதே
குள்ள நரிக்கு நீ குருதி ஆகாதே!

# மானத்தில் வாழும்

பணிந்தது போதும்
பயந்தது போதும்
எல்லைகள் காத்திட எழுந்தோடி வாரும்
தொல்லைகள் நீக்கினால் நிம்மதி வாழ்வென
செந்தமிழ் வீரனாய் சேனையில் சேரும்

மானத்தில் வாழும்
தேசத்தை தேடும்
அயல் நாட்டில் அடிமை ஆனதும் போதும்
அந்நியன் காலில் செருப்பானது காணும்
மரபு வழி எங்கள் மன்னனை நாடும்

துயரமும் நீங்கும்
சுமைகளும் வீழும்
எம் துன்பப் பயணமும் முடிந்தேதான் தீரும்
ஆணைகள் அண்ணனின் ஆசிகள் நிச்சயம்
ஆக்கிடும் ஈழ விடிவதைக் காணீர்!

# அன்னை மனம் குளிரும்

என்னைப் பெற்ற தாயும்
கண்ணீரைத்தான் பார்த்தாள்
காலம் கடந்து போயும்
துன்பக்கடலில் மிதந்தாள்!

விலங்குடைப்பான் எந்தன் பிள்ளை
விடிவதனால் பிறக்கும்
என்ற அவள் கனவும் - இனி
எம்மால் நனவாகும்!

இலங்கைச் செயற்கை உடையும்
தமிழீழம் மீண்டும் ஒளிரும்
இதில் நாங்கள் சிந்தும் குருதி
வீணல்ல அல்ல உறுதி

சந்ததிகள்மனம் குளிரும் - இது
சந்தேக மின்றித் தெரியும்
சாவை சுமந்து செல்லும் - வீரர்
சரித்திரம் கதை சொல்லும்!

# தாயக வீரனாகு

ஆறுவயசிலும் தூங்காதே
நூறு வயசிலும் ஏங்காதே!
வீரத்தமிழா - சிந்தித்து எழடா!
சீறும் புலியாய் மாறிடடா!

தூங்கி விட்டால் நீ பின்னர் துடிப்பாய்
துணிந்து நின்றாலோ செய்து முடிப்பாய்
துள்ளித் திரியும் பள்ளிப் பிள்ளைகள்
துவக்குச் சுமக்கும் காலம் இதெடா!

தமிழ்த்தாயின் பாலில் வீரமிருக்குது
தருணம் வந்தால் தட்டிக் கேட்குது
தலைமுறை அழிக்க தடங்கல்கள் நெருங்கையில்
தன்வாழ்வுப் போரென தமிழா எழடா!

வீட்டுக்குள்ளே பல குதர்க்கங்கள் வேண்டாம்
வீதி எல்லாம் பிணங்கள் கிடக்கையில்
வீர மறவரே தமிழராய் வேண்டும்
தேசம் காப்பவன் தாயக வீரன்

# கொடுப்போம் நாம் எம்மை

சங்கிலியனுக்கும் வன்னியனுக்கும்
சளைத்தவனா தம்பி
பண்டைய மன்னவர் போர்முனை சென்றனர்
படைபலம் நம்பி
பாசிச அரசின் வான்போ ரதனில்
உதவியது செவித்தும்பி
சிங்கள அரசை சிந்திக்க வைத்தது
கழுத்தினில் தொங்கியகுப்பி

அன்றைய தமிழன் ஈட்டிய பெருமை
வரலாறதுதனில் உண்டு
அதனை அறிந்தும் மோதிப் பார்த்தான்
பகைவன் புலியிடத்தில்
ஈழத் தோற்றம் உறுதி பெற்றது
உடனே வீறுடன்நின்று
ஈந்த பாசறை இன்னுயிர்க் கொடியை
ஏந்தி நிமிர்ந்ததே நன்று

ஈழத்து மக்கள் அத்தனை பேருக்கும்
தமிழீழம் ஒரு அன்னை
வீர மறவர் எல்லோ ருக்குமே
பிரபாவும் நிகர் அன்னை
பட்டினிச் சாவு வாட்டுமா எம்மை
புலியும் தின்னுமா புல்லை
தாகத்தில் வாடும் புலிகளுக் கெல்லாம்
கொடுப்போம் நாம் எம்மை!

# எங்கள் வள நாடு

தெங்குபனம் தொழில் வளமும்,
கமத்தோடு கடற்தொழிலும்,
முக்கனியும் நெற்கதிரும்;
எமக்கிங்கே உணவளிக்கும்!

காய்கறிகள் காட்சிதரும் காடாக,
கழனியெலாம் வாய்க்கால்கள் கரையோரம் பசும்புற்கள்,
இயற்கை யெலாம் கைகொடுக்கும் இங்கு
நிறைவெதிலும்காண்
எம்கைகள் ஓயாது பயிர்செய்யும் இன்பமதில்!

பசு எருமை; பட்டிகளால் பட்டினியோ நமக்கில்லை
பாயும் நீர் அழகோடு பால்பாயும், வயிறெல்லாம்
பசளைக்கும் குறைவில்லை படுக்கும் பாயும்
கைத்தொழிலாம்
உயர்நெறி நற்கல்விமுதல் உப்புவரை பொன்னாட்டில்

# போர் எனும் ஒலியினிலே

விடுதலை வேங்கை பிறந்து விட்டான்
வல்லைமா நகரினிலே
வீர உணர்ச்சியால் விலங்கினை உடைத்தான்
ஈழ நன் நாட்டினிலே - தமிழ்
ஈழ நன் நாட்டினிலே!

தமிழர்தம் தாயகம் விடிவினைக் கண்டது
வீரவிடுதலைப் புலிகளாலே
விடுதலைப் புலிகளால் தமிழினம் நிமிர்ந்தது
போரெனும் ஒலியினிலே - விடுதலைப்
போரெனும் ஒலியினிலே!

காட்டுக்கும் போரிடும் ஆற்றலை அளித்தான்
காவலரண்களும் பலசெய்து
கண்ணி வெடியும் களமும் கொடையும்
காட்டினான் அவன் இங்கே - தம்பி
காட்டினான் அவன் இங்கே!

# பெருமை உமதே

தங்கத்தின் மேலான அங்கத்தையே
தரணிக்குத் தந்த தெய்வங்களே
உங்கள் பணிக்கு நிகருண்டோ பாரில்
எங்கள் தாய்மண்கூவுறாள் எழுகிதே நன்றி

எந்த மலருக்கும் இதழ்களே அங்கம்
ஈழத்தாய் பெருமைக்கும் நீரன்றோ சொந்தம்
வந்தது தாய்க்கொரு பங்கம் என்றதும்
உம்அங்கம் அளிக்க முன்வந்தவர் நீரே

மானிடப் பிறப்பினில் மகத்துவம் உண்டெனில்
மான மறவருள் நீரவ ரன்றோ
இயேசுபிரானைச் சுமந்த சிலுவை போல்
எமக்கொரு பெருமை அஃதும தாலே!

# தாயகப் பூமி

சுட்டெரிக்கும் சுடுகாடா
தாயகப் பூமி இது
சுதந்திர நல் வாழ்வுதரும்
புண்ணிய பூமி!

இளையோரும் தலைமை தாங்கும்
இன்பமே பொங்கும்
இதற்குநிகர் இதுவே ஈழ
புண்ணிய பூமி!

சாம்பல் வரலாறு சொல்லும்
இந்த நாட்டிலே
சாலை ஓரம் சமாதி மின்னும்
மாவீரர் புகழிலே

மாண்தமிழர் ஆயிரம்
பல்லாயிர மானார்
மாதர்தாமும் புலிகளிலே
வேங்கையாயினார்.

மின்சாரம் எரிபொருள்கள்
தடையுமாயின
தமிழீழம் இருண்டதுவா
எண்ணிப் பாடுக!

சாலை எங்கும் ஒளியைவீசி
இதயங்கள் யாவும்
வீரம் விறல் ஈகம் பூண்ட
வளங்கள் ஆனபின்

# விழித்த போதே விடுதலையாம்

கழிந்த பொழுதோ கனவாகப்போகும் - அது
விழித்த போதே நனவாக மாறும்
உணர்வென்ற ஒன்று உடம்பிலே ஓடும் - சிசு
கருவான பிறகே தனிநாடு தோன்றும்!

நானூறு ஆண்டாய் நமக்கில்லை மண்ணாம்
நமக்கென்ற பின்பு காலம் கழிவதுவீணாம்
கடந்தோடும் காலம் ஒவ்வொரு கணமும்
விரைந்தேங்கி நோக்கும் எம்பணியை இம்மண்ணாம்!

எம்செயற்பாடு யாவும் செந்தமிழ் வளர்க்கும்
பண்பாடு மாறாத் தமிழீழம் பிறக்கும்
தாயக மீதினில் எம் சந்ததி வாழ்ந்திட
காலத்தின் கடமைகளை நாம் கட்டிவிட வேண்டும்!

இருட்டிற்கு பின்பு நாம் வெளிச்சத்தில் வந்தும்
இழப்பையே எண்ணி வாழ்வது மடமை!
வேரூன்றி நிற்போம் எம் வேங்கைகள் நாட்டில்
வேதனை பறக்கும் சாதனைவேண்டும்!

# கையிலோர் ஆயுதம் நீ எடடா!

மானம் போகுதடா மறத் தமிழா
மண்ணை மீட்க விழித்தெழடா
காந்திய வழியை பின்போட்டு
கையிலோர் ஆயுதம் நீ எடடா.

உண்டு கழித்து உறங்கின் நீ
உரிமை உனக்கும் கிடைக்காதே
எதிரிக்கு எம்மண்ணை கொடுக்காதே
எருமையாய் அவனுக்கு உழைக்காதே!

புலிகள் பாயும் போர்க்களத்தில்
புவியில் உனக்கும் பங்குண்டு
புறப்படு அண்ணன் படையுடனே
புகழ் கொடி பறக்கும் பாரினிலே!

நாமே மீட்கும் ஈழமிது
நாளை மலரும் தமிழீழம்
தமிழன் தாகம் தீரும் நாள்
தனித்தமிழ் நாடு கிடைக்கும் நாள்!

## போர் வழி!

தமிழனென்று தலை நிமிர்ந்து நில்லடா
நம் தாயகத்தின் சிறப்பினை நீ சொல்லடா
கொடியவனின் ஆட்சிதனை எதிர்த்து அடி - தமிழ்
கோட்டையிலே பறக்குமடா எம் புலிக்கொடி!

அண்ணனது இலட்சியத்தை மனதில் வைத்திடு
ஆருயிராய் ஆயுதத்தில் மதிப்பு வைத்திடு
பகைவனது படைகளையும் வென்றிட நீவா - நம்
படைத் தலைவன் போர்வழியில் நின்றிட நீவா!

தொல்லைதந்த காலமெல்லாம் மறைந்து போய்விடும்
தாயகத்தில் தமிழர் நிலை உயர எழுந்திடும்
தனிநாடு விரைவாக நமக்கு வந்திடும்
சந்ததிகள் அதில் நீடுவாழ்ந்து உயர்நதிடும்!

ஆட்பலத்தைக் கண்டு நாமே அஞ்சுவதில்லை
ஆடிவந்த களங்களுமோ கொஞ்சமுமில்லை
தோளோடு தோள் கொடுத்து வெற்றி கொள்ளடா
தோல்வியை எதிரிதலையில் ஏற்றி விடடா!

# தாய் மண்ணில்

காற்றிலே ஒலியைக் கேட்கிறேன்
கண்ணை இமைகள் மூடுதே
நெஞ்சிலே சுமைகள் ஏறவே
மாவீரர் நினைவில் வாடுறேன்.

அலையும் முகிலைக் கேட்கிறேன்
ஆவியும் எங்கெனத் தேடுறேன்
அன்பர்கள் உறங்கும் நாளிலே
ஆராதனைப் பாடல் பாடுறேன்.

காலத்தால் அழியா மாவீரரின்
சரித்திரம் குருதியால் படைக்கிறேன்
மனிதருள் இலட்சிய வாதியை
மரணத்தின் மகிமையை வணங்குகிறேன்.

தாய் நாட்டு பாச மறவரை
தலைவரோ நிதம் சிரம் தாழ்த்துவார்
தாய் நாட்டு விடுதலை காணவே
தாய் மண்ணில் வேண்டி யான் வாடுறேன்.

# ஈழம் காண இடர் மாறும்

ஆயிரம் ஆயிரம் அழித்தாலும்
அன்னை தமிழோ அழியாது - இங்கே
துயரோ மழையாய் பொழிந்தாலும்
தமிழரின் துணிவோ அழியாது!

வஞ்சகன் போடும் வலையாவும்
வேங்கைகள் வாழ்வில் பலியாது - அவன்
வேடங்கள் எத்தனை போட்டாலும்
வேங்கைகள் தியாகமோ நலியாது!

சகுனிகள் பிறந்த வரலாறு - அவன்
கையாளும் முறையில் தெளிவாகும்
சிங்களம் காத்திட பாரதமோ - இது
தமிழீழ வரலாறில் வேதாளமோ!

தரையிலே கொன்றான் காந்தீபம்
கடலிலே கொன்றான் சமாதானம் - அவன்
என்றுமே கொண்டது தன்நலமே - இன்று
அவனது சுயரூபம் அம்பலமே!

# தந்தை வழிமேல் தம்பி

தந்தை செல்வாவும் தம்பி பிரபாவும்
ஈழத்திருநாட்டின் இரு விழியாம்
அடிமை இருளாலே இருண்ட இனத்திற்கு
விடிவை நாட்டியதில் பேர் ஒளியாம!

தந்தை செல்வாவின் கனவுகள் எல்லாம்
தம்பி பிரபாவால் உயிர் பெற்றது இன்று
தன்னலமற்ற தியாக உள்ளம் இரண்டு
தரணியில் பெற்ற திருநாடோ இஃது!

தலைகள் போகும் நிலைகள் வந்தாலும்
தளராத தமிழன் உயிர்கள் மேலாகும்
தந்தை தம்பி வாழ்வை நினைத்தாலே
வளரும் சந்ததி துயர் நீங்கும் தன்னாலே!

அகிம்சையால் விடுதலை தந்தையோ நினைத்தும்
அடிமையின் விலங்கை தம்பியே ஒடித்தார்
தந்தையும் தம்பியும் தமிழையே நினைத்ததால்
தாயக மக்கள் கண்களை விழித்தார்!

# மானம் காக்க தானமாவோம்

எங்களின் மண்ணில் அந்நியன் வாழ்வதா
அவனது கையால் எம்மினம் மாள்வதா?
பயிலிடம் கேட்டால் இறகுகள் தருமா? - நம்
மானம் கெட்டால் பிறகது வருமா?

தமிழினம் வாழ்ந்த தாயகம் இதுதான்
தட்ட முயல்வதும் சிங்கள இனந்தான் - நம்
முன்னைய - தலைவர்கள் தந்தது வினைதான்
இத்தருணம் உதித்தான் தம்பி பெருமான்!

ஏய்த்துப் பிழைக்க ஒருசிலர் இருந்தார்
எதிரிகள் அணிக்கும் ஏணியாய் நின்றார்
தருணம் பார்த்து அவர் பதவிகள் தேட - நம்
மக்களோ ஏகினர் தம்பியை நாட!

# அன்னை பூபதியின் நினைவுகள்

தம்பியின் தியாகத்தில்
தன்னையும் கொடைசெய்த
தயங்காத தாயாக
தாயகத்தில் வந்தவளே
அன்னை பூபதியே
அம்மா நீ உத்தமியே!

உந்தன் பாதைகளை
உணராதோர் வீணரன்றோ
உதிரம் கொட்டியவர்
உன் வரிசைத் தியாகியன்றோ
அன்னை பூபதியே
அம்மா நீ உத்தமியே!

நான்கு பல வருடங்கள்
நம்மைவிட்டுக் கலைந்தாலும்
நாடு படைத்திடுவோம்
இந்நம்பிக்கை உன்னாலே
அன்னை பூபதியே
அம்மா நீ உத்தமியே!

புலி சுமந்த தாய்களிலே
புதுமை ஒரு தாயானாய்
தாயகப் பாசத்தில்
தனிஉயர்வுத் தாயானாய்
அன்னை பூபதியே
அம்மா நீ உத்தமியே!

# விடுதலை தேட
# களத்தையே நாடு

வீட்டுக்கு வீடு போராட வாரும்
விடுதலை கிடைக்கும் பூமியை பாரும்
நாட்டுக்கு நாடு முன்னேறும் போது
நாமும் கொஞ்சம் சிந்திப்பதே மேலு!

குட்டக்குட்ட குனிவதை வெறுத்து
குருதியில் உணர்வு பொங்கனும் எமக்கு.
விடுதலை நாடும் வேங்கைகளோடு
விரைந்து நாமும் சேர்வோம் தோளோடு!

சும்மா இருந்தால் விடுதலை வருமா
சுமந்த பூமி மன்னிப்புத் தருமா?
களத்திலே சாய்ந்த வீரனின் மானம்
காத்திட நாமும் கொடுப்போம் தானம்!

ஆள்தொகை கண்டு அஞ்சாதே என்றும்
வெற்றியை புலிகள் குவிக்குதே இன்றும்
தற்கொடை உணர்வை நெஞ்சிலே ஏந்தி
எம்மினம் நம்மால் பெறவேண்டும் சாந்தி!

# பூமியை உயிராய் மதி

நம்மைச் சுமக்கும் பூமி — அது
சொல்லும் நமக்கும் சேதி
உணர்வுகள் உள்ளோர் இன்றி
உரிமைகள் கிடையா தம்பி!

மண்ணில் நீயும் வந்து
மனிதனாய் வளர்ந்தாய் அன்று
மாற்றான் கையிலிருந்து — மண்
மீட்க நீயென்ன செய்தாய்?

வளங்கள் தந்து எம்மை — பசி
தீண்டாது காத்தது நன்மை — அந்த
ஏந்திய பூமியின் அன்பை
எளிதில் மறப்பவன் எருமை!

பாட்டன் பூட்டன் சொத்தை — போர்
ஆட்டமும் கண்டோ விற்றாய்
மண்ணை விற்பதோ மறவர் — இதை
மனதில் கொள்ளடா தமிழா!

# பிறந்த மண்ணில் திறந்த விழிகள்

மண்ணுக்கு பாரமாய் மரம்செடி இருக்கு
அதனால் மண்ணுக்கு பயனும் இருக்கு
உன்னால் மண்ணுக்கு பாரம் இருக்கு — அதை
தாங்கிய மண்ணுக்கோ பயனேது இருக்கு?

பிறந்த வீடும் வளர்ந்த நாடும்
இரண்டு விழிகள் என்பதை உணர்வாய்
பறந்து சென்று பணத்தைத் தேடும்
அடிமை வாழ்வை உணர்ந்து வாழ்வாய்!

இறக்கை ஒடிந்த பறவை போலும்
ஆட்சி இழந்து ஒளிந்து வாழும்
இந்தப் பிறவி மண்ணில் தேவையா?
உரிமை இழந்து தமிழனாய் வாழ்வதா?

பிரபா வழியில் நிறையா உள்ளம் - தமிழ்
அன்னையின் சினத்தில் அழிவது திண்ணம்
தமிழின் சிறப்பை அறியா உருவம்
தவறிப் பிறந்த மானிட மிருகம்!

# கூனிக் குறுகி வாழாதே

கூனிப்போகும் மனிதன் இருந்தால்
குதிரை ஏறும் கூட்டம் இருக்கும்
ஏமாந்து போகும் இனமும் வாழ்ந்தால்
ஏய்த்துப் பிழைக்கும் நபரும் இருப்பான்!

கைகள் இருந்தும் கால்கள் இருந்தும்
கவலை வாழ்வு நமக்கு எதற்கு?
கண்ணீர் காட்சி பன்னீர் ஆகும்
எண்ணிய செய்யின் புன்னகை தோன்றும்!

ஒதுங்கி ஒளிந்து பயந்து வாழ்ந்தால்
பொதிகள் சுமக்கும் கழுதைகள் ஆவோம்
எதற்கும் துணிந்து எதிரே சென்றால்
வதைக்கும் துயரம் தானே ஓடும்!

அடக்கு முறைகள் ஆட்டிப் படைத்து
இடிக்கும் நாளை இல்லாதோட்ட - நம்
சொந்த நாட்டில் இந்த நாளில்
துன்பம் போக்க விரைந்து செல்வோம்!

# சிந்திய குருதியில் செந்தமிழீழம்

மண்ணை மறந்து பறந்துபோய் தன்
மானம் ஒன்றை இழந்துபோய் - அங்கு
வாழும் மனிதன் தமிழனா?
வாயால் சொல்ல முடியுமா?!

மனிதன் ஆயிரம் இருந்தாலும்
புனிதன் ஆவதோ அருமைதான் - இந்த
புவியில் பிறவி எடுத்தாலும்
புனிதர் வடிவில் புலிகள்தான்!

விடுதலை வேண்டிய நாடுகள்
வீழ்ந்ததாய் இல்லையே ஏடுகள் - இங்கு
சிறுவர்கள் சிந்திய இரத்தங்கள் - அது
நிச்சயம் வரலாற்றுச் சின்னங்கள்!

# தியாகத்தை ஈன்ற பெற்றோரே

குண்டுக்கும் அஞ்சாத குலத்தோராம்
என்றைக்கும் சாவிற்கு அஞ்சாராம்
மண்ணிற்கு உயிரீந்த மாவீரர் — இந்த
தியாகியை ஈன்ற இப்பெற்றோராம்!

வீட்டுக்கு ஒரு பிள்ளை தம்நாட்டுக்கு — விட்டு
கொடுத்ததால் பெருமையோ இவருக்கு
பணப்பேய்க்கு அலைந்து வெளியூருக்கு
மண்பாசத்தைத் துறந்தவர் எந்நாட்டுக்கு!

படையினில் சேர்வதோ சாவிற்கு — இந்த
எண்ணமும் இருந்தது சிலருக்கு
தமிழீழம் மட்டுமா சாவிற்கு?
அயல்நாட்டில் சாவதும் ஏதுக்கு?

களத்திலே சரிகின்ற மகனுக்காய் — அடுத்த
மகவையும் தருகின்றார் உணர்விற்காய் — தமிழ்
தாயக விடிவுதான் இவருக்காய்
தந்ததோ தமிழீழ தலைவனால்!

# உதிரம் வடித்த சரித்திரம்

அச்சமில்லை! அடிமையில்லை!
பஞ்ச வாழ்வு நமக்கு இல்லை
வஞ்சம் தீர்க்க வந்தவனை
கண்டு நாமும் அஞ்சவில்லை!

எதிரி போடும் கணக்கில் நாங்கள்
எச்சில் இலைகள் ஆகவில்லை
குருதி கொட்டிப் போனபோதும்
உறுதி மட்டும் கலையவில்லை!

உயிரைப் போலாம் உரிமைகட்கு
உதிரம் ஊற்றி வளர்த்தவரை
உறுதிகொண்டு போற்றிடாத
உலுத்தர் தூசி மனிதரல்ல!

விடுதலைசார் தேசமதை
விரைவில் நாமும் அனுபவிக்க
அடையச் செய்தோர் தியாகசீலம்
அதை அளக்க கோலோ இல்லை!

# நெஞ்சமே தாயின் தஞ்சம்

உறுதி கொண்டவன் உரிமை கேட்கிறான்
உயிரை நினைந்தவன் கம்பி நீட்டுகிறான்
தன்மானமே இனத்தின் சொத்தாகுமாம் - தாவி
நாமும் பாய்ந்தால் அது செத்து மடியுமாம்!

இறுதிவரை வந்துவிட்டோம் உடல் சோரவில்லை
ஈழமண்ணை மீட்டெடுக்கும் தாகம் தீரவில்லை
நிமிர்ந்து விட்ட குருத்துகளும் வரண்டுவிட வில்லை
சாதி மத பேதங்களும் தலைக்கு ஏறேவில்லை!

ஆண்டுகளோ பல ஓடி மறைந்த போதிலும்
அரக்கர் ஆள எண்ணும் காலம் நிறைவுபெறாது
அன்னைபூமி மானம்காக்கும் மறவர் மீதாணை
அண்ணன் கையில் செங்கோல்மாறும் இஃதுநிச்சயம்!

விடிவு விடிய கீதங்கள் பாடும் இதயங்கள் - எங்கள்
விடுதலையை தேடி ஆர்க்கும் உதய கீதங்கள்
புலிகளின் தோள் சுமந்து செல்லும் வெற்றி ஆயுதம்
புதுயுகத்தை விடிவை வாழ்வை வருக்கும் சூரியன்!

# பொன் நாடு

இந்நாடு எங்களின் தாய்நாடு
எம் நாடு எதிரியின் சுடுகாடு
இம்மண்ணில் தாய்மொழி தமிழாகும்
தமிழ்இனமோ தாய்நாட்டில் உயிராகும்!

புவியினில் நம்தேசம் பணியாது
புலியாகும் நம் பாசம் சோராது
புதைகுழியும் போராடும் புலியாகும்
புதுயுகமும் இனி ஈனும் நம்நாடு!

வளம்யாவும் குறையாத திருநாடு
வரலாறு படைக்கும் இத் தமிழ்நாடு
வீரத்தலைவரின் பூமியும் இதுவாகும்
விடுதலை வேங்கைகள் உளமாகும்!

# ஈழத்தாய்

ஈழமெனும் புனித பெயர் எனக்குண்டு
என்பெயர் சொல்லி இங்கு பலகுழுக்களுண்டு
நானூறு வருடம் நான் படும் பாடு
வெட்கித் தலைகுனிய வேறென்ன உண்டு.

தட்டிக் கேட்போமென்று சபதங்கள் கூறி
தட்டேந்திக் கொண்டு தாயக எல்லையில்
காட்டிக் கொடுக்குமிந்த கயவர்கள் கூட்டம்
ஒழியும் நாளே என்விடிவு நாளாம்

துரோகத்தின் வடிவத்தில் சிங்கள அரசில்
தலையாட்டி வேலை சிங்கக் கொடி நிழலில்
மனிதனுக்கு ஞானம் பிந்தியும் பிறக்கும் - இந்த
மடையர்க்கு ஞானம் புலிதான் புகட்டும்.

என்பேரில் இவர்களுக்கு இலட்சியம் உண்டா? - இல்லை
ஒழிக்கவேண்டும் புலியை என்பதே கனவு!
தலையாட்டியெண்ணம் ஏறுமா? - இல்லை
புலியின் குருதியால் என் நிலைமாறும்.

# விழிப்பு !

கண்கள் இருந்தும் குருடராய் வாழ்ந்து
காலத்தை கழிக்கும் ஆசாமிகளோ சில பேர்
கடமை உணர்வில் களத்தினிலே பாய்ந்து
கொடையாகிச் சுடராகும் புலிகளிலே பலபேர்!

பொன்னை வெறுத்து பொருளையெலாம் வெறுத்து
தன்னையும் இழக்கும் தியாகிகள் இளையோர்கள்
தம்வாடிடும் குடும்பம் தேடிய சொத்தாய்
மனங்களில் நிறைந்த மாவீரரோ பெரியோர்!

சொத்தையும் காத்து சொந்தங்கள் பார்த்து
செத்ததோர் பிணம்போல தேசத்தில் வாழும்
பித்தர்கள் கூட்டம் வாழ்ந்தென்ன பயனோ
நித்தமும் இவர்கள் நித்திரை தானோ?

மறத்தமிழ் பரம்பரை மானத்தில் வாழ்ந்து
மாவீரர் ஆனாலும் மனங்களில் நிறைந்தார்
வளமெல்லாம் நிறைய பலமோடு வாழ்ந்து
இளம்புது ஈழம் படைத்திங்கே வாழ்வோம்!

எதிரணி எண்ணிக்கை ஆட்பலம் கூடினும்
எம்எல்லை தாண்டிடின் அரைப்பங்கு ஆவர்
எஞ்சியோர் ஏக்கத்தில் மிஞ்சியும் வருவரோ?
எம்மண்ணின் வீரத்தை அவர்ஏட்டினில் வடிப்பரோ!

# காத்திட வருவான்

அகதிமுகாமில் பிறக்கும் தமிழன்
அன்னைபூமியை காத்திட வருவான்
வேருடன் பகைவரை அழித்துமே இங்கு
வெந்த மண்ணிலே தமிழதைக் காப்பான்!

சாதிப்பிரிவில் தாய்நாடு அழுந்த
சந்ததி நலியும் நிலையதைக் காண்பான்
தனக்கொரு பாதை இருப்பது கண்டு
தலைவர் வழியில் விரைந்து நடப்பான்!

காக்கையினத்தின் வாழ்வினைப்போல
தமிழின ஒற்றுமை நாளொன்று காண்பான்
தங்கத் தமிழின் பெருமையைச் சொல்லி
தமிழீழ மண்ணின் எல்லையை காப்பான்!

சிங்கத்தமிழர் சிந்திய இரத்தம்
நெஞ்சிலே கொண்டு காரியம் முடிப்பான்
எதிரி கையில் ஏங்கிய மண்ணை
மீட்ட மாவீரர் தியாகத்தை மதிப்பான்!

# உயிரிலும் உன்னதம் உரிமை

உயிரும் உன்னை அறியுமெடா - அது
உன்னை ஒருநாள் பிரியுமெடா
வாழுமட்டும் கோழையனாய் நீ
வாழ்ந்துவிட்டால் ஏசுமடா!

கருவில் வளர்ந்த வீரமடா - அதை
காக்கும் புலிகள் தீரமடா
கொடுமை கண்டு நடுங்காமல் - உன்
உரிமை காத்துப் போராடு!

துயரம் சுமந்த தாய்தானே - அவள்
சுமந்து பெற்றதும் மகன்தானே - நீ
தாயின் துயரம் தீர்த்திடுவாய்
தவறும் இடத்தில் வாழ்வில்லை!

தொட்டிலில் தலைகள் தொங்கியது
கட்டிலில் உறவை வெட்டியது - இது
பகைவன் படையின் கொடுமையடா - நீ
பதுங்கி வாழ்ந்தால் மடமையடா!

# உரிமைப் போரில்

மண்ணும் மாறவில்லையென்று மனதைத் தேற்றுவோம்
மனதும் மாறவில்லையென்று மார்பு தட்டுவோம்
மாவீரர்களின் ஆலயத்தில் மலர்கள் சூடுவோம் - அவர்
மாசற்ற தியாகத்தையே மனதில் பாடுவோம்!

போர்முனைகள் சென்றுதானும் உரிமை நாட்டுவோம்
ஏர்முனையில் எங்கள் மண்ணின் வளத்தை பெருக்குவோம்
சாதி மத பேதமில்லா சமத்துவத்தோடு - நம்
சந்ததிகள் வாழ்ந்துவிடும் வழியைக்காட்டுவோம்!

அன்னை தந்தை உறவுகளை மறந்த போதிலும் - எம்
அன்னை பூமி விலங்கொடிக்க ஒன்று கூடுவோம்
ஆளடுக்காய் எதிரணிகள் வந்தபோதிலும்
அந்நியனின் தலையறுத்து வெற்றி சூடுவோம்!

வாழ்ந்த மண்ணில் குடியிருப்பை மீண்டும் ஏற்றுவோம்-நம்
தலைவனது சேவைகளை மனதில் போற்றுவோம்
எல்லையிலே துயர் நீக்கி கொடியை ஏற்றுவோம்
- அதன்
அசைவிலே தமிழினத்தின் குறையை போக்குவோம்!

# வஞ்சம் அழிந்தது

கொடுமைக்கும் ஒருநாள் எல்லையுண்டு அந்தக்
கொடியோனும் அழியும் காலமுண்டு
நன்மைகள் நமக்கு நாளையுண்டு
நந்தமிழ் காக்கவும் தலைவனுண்டு!

தமிழர் தாயகத்திலே அழிவும் உண்டு - அந்த
அழிவிலே வளர்ந்த அறிவும் உண்டு - எம்
எல்லை நிலைநாட்டும் எண்ணமொன்று
எம் இனத்தின் மனத்திலே எழுந்ததுண்டு!

சுயநலம் கொண்டோர் காலம்ஒன்று - எம்
வரலாற்றுப் பாதையில் இருந்ததுண்டு - இவர்
எதிரிகள் வருடியாய் இருந்ததுண்டு
எம்மினம் ஏமாற்றம் கண்டதுண்டு!

சிங்கள சிறீச் சண்டை மூண்டதுண்டு - அன்று
அடக்கு ஒடுக்கு முறை அரசானதுண்டு
அண்ணன் வகுத்த புதுப்பாதை ஒன்று
அடிமை விலங்கை உடைத்ததின்று!

# உழுதுவாழ் - தொழுவதேன்?

உழுதுண்டு வாழ்பவன் உயர்ந்தவனே - அவன்
ஊர்ப்பசியை அறிந்த பெரியவனே
கழிசானை மாட்டிவரும் தொழிலதுவோ
காவயிற்றை நிரப்பாத உழைப்பதுவோ!

வளத்தோடு குளம்யாவும் நிறைந்தது பார் - இந்த
நிலத்தோடு நம்நாடு சிறந்தது பார்
பணத்தோடு பிணமாகிக் கிடப்பவன் - நம்
வருங்கால வளர்ச்சிகளை மறந்தவன்!

அயல்நாட்டு மோகம் பிறந்தது - அது
தாய்மண்ணின் பாசத்தை மறைத்தது
போருக்கும் ஏருக்கும் தயங்கியோர் - சொந்த
ஊருக்கே உதவாமல் போயினர்!

மேல்நாட்டு மோகங்கள் கலந்தன - தமிழ்
பண்பாட்டை ஒவ்வொன்றாய்க் கலைத்தன
தன்மானம் தமிழ்நாட்டில் அலைந்தது - அதை
தார்மீகத் தலைவன்மனம் அறிந்தது!

# விடிவு காணும் நாடு

இலங்கை நாட்டில் விலங்கை ஒடித்து
விடிவைத் தேடும் இனங்கள் நாங்கள்
சிங்களத்தின் வேங்கை ஆகி வாரீர்
தமிழ் ஈழம் காண்போம்!

மானம் காக்க மாண்டோர் உண்டு
மா வீரர் வரலாறும் உண்டு
வெள்ளைத் தோலான் வரவைக் கண்டு
வெகுண்டு போனோர் தவறே அன்று!

அண்ணன் அணியில் நாம் இணைந்து
அல்லல் நலிவு துயர் மறந்து
ஆளும் ஆட்சி நாம் அடைந்து
அன்னை இனிது மகிழ்தல் காண்போம்!

காவியக் கரிகாலன் வழியில்
காக்கும் தியாக படையைக்கொண்டு
சிங்கள வெறி அழிவை வென்று
உருவாக்கி உய்வோம் தனிநாடு ஒன்று!

# தலைவன் நம் இதயம்

நாடு ஒன்று காண வேண்டும் தோழா
நாங்கள் அதில் வாழ வேண்டும் தோழா
உழுது உண்டு வாழ வேண்டும் தோழா - நிலம்
தொழுது வாழ்த்த வாழ வேண்டும் தோழா!

வளமெல்லாம் பிறந்திருக்கு மண்ணில்
பலம் கொண்ட வலுவிருக்கு நெஞ்சில்
பயமென்ற ஒன்றில்லை எம் உள் - இது
பரம்பரையின் குருதியிலும் ஓடவேண்டும் தோழா!

எந்த நிலை வந்தாலும் இம்மண்
எங்களது என்றநிலை வந்து
இதை மீட்குமட்டும் தீராது தாகம் - புலி
இரத்த வெள்ளம் இதுவெனவே பாயும்!

நீ பிறந்த மண் இதனைப் பாராய் - தாய்
பாசம் மிகு புலிகள் குரல் கேளாய்
தியாகங்கள் தற் கொடைகள் உதயம்
தார்மீகத் தலைவனோ நம் இதயம்!

# தமிழினத்தின் பெருமை

மானத்தில் பிறந்தவன் தமிழன்
மானிடம் போற்றும் மறவன் - தமிழ்
தாயகம் காப்பவன் இறைவன்
அவனோ தமிழரின் தலைவன்!

பட்டினி சாவை உதைத்து
உழுதுண்டு வாழ்ந்தே உயர்வோம்
விடிவொன்றை எண்ணி நாம் உயிரை
வித்தென நாட்டுவோம் வாரீர்!

புலிகளை சுமந்த வயிற்றோர்
எலிகளைக் கண்டும் மிரளார்!
எரிமலை வெடிக்கும் நேரம் - அங்கு
ஏணியாய் நிற்பார் தாய்மார்!

கல்வியும் கற்கும் சிறியோர்
கடமை இருப்பதை உணர்ந்தார்
களத்தில் காணும் பலியால் - தம்
உயிரைத் தரவும் துணிந்தார்!

# செய்து முடிப்போம்

துன்பமென்ன எங்கவீட்டு சொந்தமா - நாம்
துணிந்து நின்றால் தமிழீழம் இல்லையா?
என்றும் எங்கள் வாழ்வினிலே தொல்லையா - இல்லை
ஏனிந்த நிலையென்று எண்ணய்யா!

கதிரவனும் காலையிலே எழுகிறான் - அவன்
கண் விழிக்கும் காலமென்று சொல்கிறான்
களம் கண்ட புலியாவும் வென்றதே - இந்த
கதை மாறும் காலம் இனி இல்லையே!

குருதி வெள்ளம் இனியுமிங்கே ஓயுமே - புயல்
காற்றாக புலிகளிங்கே பாயுதே
சிங்களவன் கொடுமைகளோ சிதறுமே - இதை
சிந்தித்த அவன் நெஞ்சம் பதறுமே!

மாண்புமிகு தலைவனிங்கே மன்னனே - அந்த
மாசில்லா மனத்தோனும் புனிதனே
தொடரவேணும் அவன் விடிவுப் பயணமே - அதை
தொழுது கொண்டு நாம் வாழ வேண்டுமே!

# வலிமையும் வளமும்

இரத்த வனத்தில் ஈழத்தை மீட்டோம்
வீரம் பொங்கும் ஞாலத்தை கண்டோம்
பந்தசொந்தத்தை வேரோடு மறந்து
பாரினிலே நமது ஈழத்தை படைப்போம்!

வாழும் உரிமையை நாட்டைப் பறிக்கும்
சிங்கள அரசு போட்டிட்ட திட்டம்
இது தமிழன் நாடென்று தெரிந்துமோ எழுந்தது
எல்லையை தாண்டியே குடியேறும் எண்ணம்!

கருகிய மண்ணில் கடமைகள் புரிந்து
அழிந்தவளம் கலை நிலைகளை மீட்போம்!
நடந்ததை நினைந்து கவலையைத் துறந்து
சுதந்திர நாட்டை நாம் பேணியே காப்போம்!

பட்டகொடுமைக்கு பதிலும் நாம் சொன்னோம்
பனாட்டு - சூழால் தடையை உடைத்தோம்
எங்கள் மண்ணின் வலிமையால் - வளத்தால்
எதிரியை உடைத்தோம் இனிநாம் வாழ்வோம்!

# உயிராகி நின்ற தலைவன்

மலர் மாலை அணியாத தலைவன்
மாபெரும் வெற்றிகொள் மறவன்
வாத்தியம் ஊர்வலம் இல்லை
வாழும் தாய் லட்சிய மாற்றமுமில்லை!

தமிழீழ தாகமே கொண்டான் கொண்ட
இலட்சியம் நிறைவேற போராடி நின்றான்
எம்போன்றோர்க்கு அவன்தானே தெய்வம்
அந்த வழியினில் நாமென்றும் செல்வோம்

வரிப்புலி அங்கியை அவன் தாங்கிக் கொண்டான்
வசைபாடும் யாபேரும் வாய் மூடிக்கொண்டார்
தமிழ் இன விடிவுக்கு தரணியில் தலைவனாய்ப் பிறந்தான்
தமிழீழ பிறப்பிற்கு உயிராகி நின்றான்!

# எங்கள் கடமை

நம்மிலே சிறுவர் நாளைய தலைவர்
நமது மண்ணை காப்பதில் வலியோர்
சாலையில் தூங்கும் வீணருக் கெல்லாம்
சத்தியச் சுவட்டை சிந்திக்க வைப்பர்!

பள்ளிச் சிறுவரும் வேண்டுவது விடுதலை
பயந்து வாழ்வதில் பயனேதுமில்லை
பருவப் பெண்களும் போராடும் பாரில்
பிறப்பது விரைவில் தமிழீழ நாடு!

அன்னையும் பிதாவும் வழிகாட்ட வேண்டும்
அழியும் தமிழுக்கு உயிரூட்ட வேண்டும்
அந்நிய ஆட்சியில் அடிமையாய் வீழ்ந்தால்
அவனோ எமைக்கொள்ளல் சுலபமே! சுலபம்!

சுயநலப் பேய்களை நாம் ஒறுக்க வேண்டும்
சரித்திரம் படைத்தோரை மதிக்க வேண்டும்
தாகத்தை ஊட்டிய எங்கள் தலைவனை
ஈழத்தை எம் நெஞ்சில் உயர்த்த வேண்டும்.

# தலைவனை நம்பிய தமிழினம்

தாயகம் தருவார் தம்பி - என்றும்
தயவுடன் இருப்போம் நம்பி
தூயவர் காட்டிய பண்பு
துயரையும் கலைத்தது நம்பு!

புலியென பாய்ந்தார் அன்று - பெரும்
புயலாய் எழுந்தோம் இன்று
புரிந்தோர் உணர்வில் மிதந்து
சுதந்திரம் பிறந்தது இங்கு!

தியாகத்தின் சிகரம் தம்பி - அவர்
செய்ததும் யாகங்கள் நம்பு
இத்தலைவரே தமிழின் காப்பு
இத்தத்துவம் தமிழின் வாழ்வு!

சிங்கள இனத்தின் வம்பு - அது
சிதறியே போகும் நம்பு
நரம்பில் துடிப்பதோ உணர்வு
நம்மானம் காப்போம் எழும்பு!

# அவலம் போக்க எழுவோம்

துப்பாக்கி வேட்டுக்கள் தூக்கத்தை கலைக்கும்
நடுச்சாமம் பார்த்து எறிகணை கொல்லும்
அதிகாலை நேரம் ஒப்பாரி கேட்கும்
ஆர்வீடு பார்த்தாலும் சாவீடு நடக்கும்!

அப்பாவி மக்கள் அங்கத்தை இழப்பர்
ஆகாரமின்றி வீட்டோரம் சாவர்
அகதிமுகாமை தேடியும் பகைவர்
குண்டுகள் போட்டு கொன்றுமே குவிப்பர்!

வானொலி தொலைக்காட்சி உணவுகள் தீத்தும்
கிடைக்கும் பொருள் தென் இலங்கைக்குச் சேரும்
செந்தமிழனின் வயிறு ஒடுங்கியே வாடும்
பகைவர் வெறியர் குரல் கூத்தாடும்!

கடலிலே போனால் கப்பலும் தாக்கும்
வயலிலே உழுதால் வான்தாக்கு கிடைக்கும்
எம்வீட்டி லிருந்தாலும் எறிகணை தாக்கும்
எதிரிக்கு எம்மண் எமனாவதென்றோ?

# கொடுமை என்றும் நிலையாது

விண்ணும், மண்ணும் உண்மை அறியும்
தமிழின் பெருமையை என்றும் புரியும்
குருதியும் பாய்ந்த காலமும் முடியும் - அதில்
விடிவோ ஒருநாள் நமக்கும் தெரியும்!

சத்தியத் தலைவனின் தானம் தெரியும்
சங்கத் தமிழோ அதையும் அறியும்
உத்தமன் காட்டும் பாதையின் நிலையும்
உண்மை, உணர்வில் நாட்டை அடையும்!

புத்தன் வேதத்தை மறந்தவன் கொடுமை
நிச்சயம் அவனை வந்தே அடையும்
தார்மீகம் பேசிய தலைவனின் நிலைமை
சிங்கள இனமும் கண்டதே பயனை!

தமிழன் கேட்டு துடிப்பது உரிமை
அடக்க நினைத்தது சிங்களவன் மடமை - இங்கு
வேங்கைகள் ஊதும் வெற்றியின் சங்கை
தரணியும் பார்க்கும் தமிழனின் பங்கை!

# காலத்தை மதித்து களத்திலே இறங்கு

நேரமோ பொன்னானது - இந்த
காலமும் கண்ணானது
கருவிலே தோன்றிய வீரம் - இங்கு
கருகிப் போவதோ? ஞாயம்!

பத்துத் திங்கள் சுமந்தவள் நெஞ்சம்
திக்குத் தெரியா காட்டிலா? தஞ்சம்
எட்டி உதைக்கும் பகைவரின் கூட்டம்
எங்கள் நாட்டிற்கு வந்தாலே வாட்டம்!

அந்நியன் கையாலே அவலக்குரலோ? - அன்றி
அவனை நோக்கும் துப்பாக்கி குழலோ?
சீறும் சிறுத்தையாய் மாறும் சிறுவர் - என்றும்
எதிரி வலையை எரிக்கும் மறவர்!

உறுதி கொள்ளும் மறவர் கூட்டம் - தம்
உயிரை இழந்தும் உரிமை கேட்கும்
தமிழன் வாழும் காலம் மட்டும் - பெரும்
சங்கிலித் தொடராய் தியாகம் இருக்கும்!

# வங்கக் கடலில் தனியொரு நாடு

சிந்திய இரத்தமும் சந்ததி காணும்
சிந்தனை கொண்டும் இனமொன்று சேரும்
தந்தது சுதந்திரம் யாரென்று தேடும் - அது
தாய் தந்தை தியாகத்தை தாய் நாட்டில் பாடும்!

தாயகம் ஒன்றை தமிழினம் காணும்
தடங்கலோ இல்லா உரிமையில் வாழும் - இங்கு
தன்னலம் மறந்த தியாகிகள் கூடும் - அந்த
ஆலயம் ஒன்றை காலமும் காட்டும்!

வேதனை கண்டும் சாதனை பேசும்
வெந்த மண்ணில் பொன்னோ விளையும் - இங்கு
வேறொரு நாட்டான் ஆட்டம் மறையும்
வேங்கையின் கொடியில் செங்கோல் ஆளும்!

சாள்சின் காலம் தமிழீழம் நீளும் - இதில்
சிங்கள தேசம் சிதைந்து போகும்
இலங்கை நாடோ வேங்கை நாடாய்
வங்கக் கடலில் நாமம் மாறும்!

# தியாகத்தின் உணர்வுகள்

ஆயிரம் தியாகிகள் அரக்கனின் போரில்
அன்னையை மீட்க வாடுறார் துயரில்
இத்தனை தாய்களும் எத்தனை நாளில்
உண்ணாது பாதி உறங்காது மீதி.

காகம் கரைந்தாலும் கலவாய் பறந்தாலும்
வாசல் படிமீது நாடிக் கையோடு
சேதி எதுவென்று பதறும் தாய்களுக்கு
வந்தது துயரென்றால் வயிறது நெருப்பாகும்!

இதற்கும் எதிர்மாறாய் ஏறுகிறார் விமானத்தில்
எனியென்ன எனக்கென்று எண்ணுகிறார் எத்தனையோர்
என்றைக்கோ ஒருநாளில் இங்குதான் வரவேண்டும்.
ஏன் தான் போனேனென்று வாடுவார் வாழ்நாள்முழுதும்.

இருளுக்கு பின்னே விடிவொன்று தோன்றும்
புலரும் பொழுதில் தமிழீழம் மலரும்
தார்மீகத் தலைவனின் தன்மனம் மகிழும்
தன் மானத் தமிழருக்கு ஆனந்தம் திகழும்!

# எத்தடைக்கும்
# அஞ்சாது தற்கொடை

இரவென்றும் பகலென்றும் தூங்காத உள்ளங்கள்
தூங்கிவிடும் ஒருநாளில் நமக்கெல்லாம் துயரங்கள்
தீயாக கொதிக்கின்ற உள்ளத்தின் வேதனைகள்
தீயினிலே பொசிங்கினாலும் தீராது தாகங்கள்!

சீருடையை அணிந்துவிட்டால் கவலைகளோ பறந்திடுமா?
தூக்கியது கருவியென்றால் துயரங்களும் மறந்திடுமா?
தன்மானம் காத்துவிட தன்னலத்தை பாராமல் - புலியோ
இளமையின் இன்பத்தை தியாகத்தில் மறைத்திடுவார்!

போராட வந்ததெல்லாம் பொம்மைகளாய் இருந்திடுமா?
உறவெல்லாம் மறப்பதற்கு உருக்குத்தான் இருதயமா?
போதனையின் நுணுக்கத்தால் சாதனைகள் சமைக்கின்றார்
சாவொன்று வரும்போது தாய்மண்ணை அணைக்கின்றார்!

தந்தையோ சிந்தனையால் தானன்று செய்திருந்தால்
தனயனது கேள்விக்கு தலை குனிய தேவையில்லை
தாமுமதை செய்யாவிட்டால் சந்ததியே தவிக்குமென்று
தம்முயிரைப் பாராமல் தற்கொடையாய் போகின்றார்!

# நச்சுப்பாம்பை எச்சரிப்போம்

ஒண்ணாய் இருந்து பழகிய கூட்டம்
அண்ணன் உயிர்மேல் கொண்டதே நோட்டம்
அந்நியன் போட்ட கணக்கின் திட்டம் - அது
தன்னைத்தானே சுற்றும் வட்டம்!

சத்தியத் தாயின் உத்தமப் பிள்ளை
சாவிற்கு அஞ்சி வாழ்ந்ததே இல்லை
தியாகத்தின் மலைகள் அவனுக்கு கவசம் - அங்கு
திண்ட வீட்டுத் துரோகிக்கு நாசம்!

பரம்பரை சொன்ன பழங்கதை எல்லாம்
படித்ததோ பாதி. கண்டது மீதி
காட்டிக் கொடுக்கும் தமிழனின் இனங்கள்
காக்கை வன்னியன் இறந்தும் இருக்குதாம்!

தங்கத் தலைவனின் உயிரோ என்றும்
தமிழன் காலம் மட்டும் இருக்கும்
குடிக்க நினைக்கும் நரிகளின் திட்டம்
பொடிப்பொடியாகும் போலிகள் பொசுங்கும்

# வானமும்
# எங்கள் உடமையடா!

அக்கிரமம் வானில் பறக்குதடா
அதர்மம் குண்டை போடுதடா
தமிழன் குடியும் அழியுதடா - அதை
தாங்காத நெஞ்சம் குமுறுதடா!

ஒன்றா, இரண்டா, பறக்குதடா - அது
ஓயாது குண்டை இறக்குதடா
ஒழிந்து வாழ்வது மடமையடா
அழிவிலும் உரிமையை அடைவோமடா!

வானமும் எங்கள் உடமையடா - அதில்
பறந்தவன் கதையும் முடியுமடா.
பரம்பரை கண்ட மறவரடா - இது
சுதந்திர நாட்டுத் தமிழரடா!

அந்நியன் ஆட்சியோ கொடுமையடா - அயல்
நாடும் அவனது அண்ணனடா
ஆள்வது நாங்கள் உறுதியடா - அங்கு
அஞ்சாமை எங்கள் உடமையடா!

# உயிரிலும்
# உன்னதமானது உரிமை

அல்லும் பகலும் வேதனை தான்ராதம்பி.
அதுக்கு நாமும் ஓடமுடியுமா அஞ்சி.
வருவது வரட்டுமே உயிரையும் மிஞ்சி - எதுக்கும்
சிங்கத் தலைவனின் வழியையே சிந்தி!

தூற்றிய களத்தில் குவிந்துகிடப்பது நெல்லு
துாசியாய் பறந்து வெளியில் போனது பதரு - அதுபோல்
மானங் காத்த வீரரெல்லாம் நாட்டிலே
உயிரைப் பிடித்து ஓடிப்போனவன் வெளியிலே!

பச்சை வயலில் காட்சியாகும் களைகளை
பருவம் கண்டு களையவும் வேண்டும் வயலிலே - அதுபோல்
தியாகப்போரில் யாகம் செய்யும் பலரிலே
பாவனை செய்யுது ஒருசில முகங்கள் நடிப்பிலே!

கதிரைத் தாங்கி காத்திருந்தது பயிரு
அடியுதை வாங்கி மாறியதால் மாட்டுக்கு தீனி அதுபோல்
ஆக்கினை மத்தியில் அன்னத்தை ஊட்டிய பேரு.
ஆளவந்த பின்பும் அமைதியாய் திரியினம் பாரு!

# தன்மானம் காக்க குருதியோ தானம்

எல்லையிலே எமக்கோர் நிலையுண்டு - எந்த
தொல்லையிலும் நமக்கும் பல கலையுண்டு
இல்லையே என்றோர் சொல்லிங்கு
எந்நிலையிலும் தோன்றாது நீ நம்பு!

பாலையும் மறக்காத பருவமொன்று
பாட்டன் தமிழ்காக்க வந்ததிங்கு
தன்மானம் தமிழனின் சொத்தென்று - நம்
தாயகமோ தருவது வித்தொன்று!

அல்லலில் அடிமை விலங்கொன்று
அன்னைக்கு கவலையாய் விழுந்ததென்று - அதை
அறுக்கவும் அண்ணன் அணியொன்று
உயிரையும் தந்திடும் நிலையிங்கு!

தன்னிலை மறந்த தமிழனன்று - நம்
தாயகப் பகைவனிடம் தஞ்சமென்று - தன்
இனத்தையே அழிப்பதும் உரிமையென்று
உதிரத்தைக் குடிப்பதே இழிவிங்கு!

# பண்பாடு காக்கும் நம்நாடு

சாவொன்று வருவது தெரியாது
சந்தித்த வாழ்வும் நிலையாது
மானத்தில் வாழ்வதே பண்பாடு - அதை
மதித்தவன் வரலாறே நம்நாடு!

ஒருசாண் வயிற்றுக்கு உழைத்தாலே சோறு
உறங்காத ஊருக்கு தொல்லைகள் ஏது?
வனத்தாலே தொழில்யாவும் பலம்பெற்று ஓங்கும்
வருங்கால சந்ததிக்கும் தடையாவும் நீங்கும்!

ஆடாமல் அசையாமல் பூட்டினாரே விலங்கு
அன்றோடு தொடர்ந்ததே நமக்கெல்லாம் தீங்கு - இதை
வேரோடு சாய்த்துவிட வேங்கைகளின் தலைவனோ
தார்மீக யுத்தத்தை தாயகத்தில் வைத்தாரே!

தியாகிகளாய் வந்தவர்கள் சாதித்த சாதனைகள்
சிந்தனையின் சிகரமான தலைவரது போதனைகள்
தமிழனது தன்மானம் தரணியிலே நிலைக்கட்டும்
தாயகமாய் தமிழீழம் தமிழருக்கு பிறக்கட்டும்!

# புனிதனால் என்றும் மனிதனாய் வாழ்வோம்

அண்ணனின் கையில் ஆட்சியை மாற்று
அதனால் விளையும் மகிமையை போற்று
தொட்டிலில் பிள்ளைக்கும் வீரத்தை ஊட்டு - நம்
தமிழீழ தேசத்தில் புலிக்கொடி நாட்டு!

தலைவிதி என்கிற கோலத்தை மாற்று
தன்மானம் தமிழனின் நெஞ்சிலே மாட்டு - வீரர்
களத்திலே கண்டதை உள்ளத்தில் ஏற்று - தமிழ்
காவியமானதை ஏட்டாலே ஊட்டு!

போரிலே பயந்து போனோரை மறந்து - இங்கு
பொல்லாத படைகளை இல்லாது கலைத்து
பெருமையில் எம்மினம் வாழ்ந்திட நினைத்து
தம்முயிர் ஈந்த புனிதரை வணங்கு!

தன்னலம் மறந்த தலைவனை மதித்து - அவர்
காட்டிய பாதையை புனிதமாய் துதித்து
எம்மினம் என்றும் வாழ்வதே சிறப்பு - பெற்ற
தலைவரோ எமக்கு தார்மீகப் பிறப்பு!

# நொந்த மனதில் தொந்தரவு தராதே!

தொல்லை தந்த துன்பநாளே போய்விடு
விடிவொன்றை தந்துவிடும் இன்பநாளே வந்துவிடு - இங்கு
குடித்த உயிர்கள் போதுமென்று சபதமிடு
துடிக்கும் எங்கள் தமிழினத்தை வாழவிடு!

அன்னைபூமி கடமை செய்ய வந்தவரை
அழித்துவிடும் நிலையை நீயும் மறந்துவிடு
அந்நியனை வாழவைக்க எண்ணிவிடும் - உன்
அகந்தை உள்ளம் கொண்டுநீயும் பறந்துவிடு!

என்ன எண்ணி எம்மினத்தை ஒடுக்க வந்தாய்
ஏனிந்த வளநாட்டை கெடுக்க வந்தாய்

சந்ததிக்கும் உன்கொடுமை காட்டாதே - அவர்
சாதனைகள் புரிந்திடுவார் மாட்டாதே
இந்தநாளை உந்தன் நாளாய் எண்ணிவிடு
இதுக்கு மேலே எந்த நாளும் தணிந்து விடு!

# வீரம் பிறந்த விதம்

வீரத்தை விதைத்தவன் ஒருவன் - அந்த
ஒருவனே நமக்கெல்லாம் தலைவன்
பட்டாளம் என்றாலே பதட்டம் - அக்
கூட்டமும் இப்போது ஓட்டம்!

அந்நியன் தொல்லைகள் ஏராளம் - நம்
நாட்டிலும் கண்டோமே தாராளம்
எதிர்க்கவோ வலுவற்ற எம்மினம் - எம்
தேசத்தில் மௌனமாய் இருந்தினம்!

எல்லையோ இல்லாத வேளையில் - நம்
தம்பியோ தோன்றினார் வல்லையில்
சாலையில் உலாவிய பேய்களோ
சத்தமும் இல்லாது போயினர்!

எதையும் தாங்கும் இதயம் - கொண்ட
தலைவனின் பலமோ இமயம்
தற்கொடை ஈந்த தியாகம் - நம்
தமிழீழம் இங்கே உதயம்!

# தமிழனொரு தனிப்பிறவி

குருதி ஓடும் சத்தம்
நாடி மூலம் கேட்கும் - வீர
தமிழன் என்று சொல்லும்
தன்மானம் இதயம் காட்டும்!

அடிமை போட்ட விலங்கு - அது
கொடுமை என்பதை விளங்கு
அண்ணன் போடும் கணக்கு - என்றும்
விடிவை காட்டும் உனக்கு!

பறந்து, பறந்து உழைத்து
பணத்தை சேர்ப்பதை மறந்து
தியாகப் படையில் சேர்ந்து - தாய்
நாட்டை காப்பாய் இணைந்து

உயிரைப் பிடித்த குரங்கு - நீ
பயந்த மரத்தால் இறங்கு
உரிமைப் போரே நடக்கு - அதில்
எதிரி படையை மடக்கு!

# பார்போற்றும் பைந்தமிழ் நாடு

களவுமில்லை! உழவுமில்லை
கற்பழிப்புக் கதையுமில்லை!
கன்னியரைப் பின் தொடரும்
காமவெறிப் பேய்களில்லை!
கட்டி வைத்த கோட்டையொன்று - ஈழ
கரிகாலன் மன்னனிங்கு!

ஏய்த்துப் பிழைக்கும் கூட்டமில்லை
ஏர் பிடித்தோர் சலித்ததில்லை
உயர்வு தாழ்வு ஏதுமில்லை
உணராதோர் யாருமில்லை
மானம் காத்தான் மன்னனென்று - ஈழ
மணிமாறன் பேரிங்கு!

வளமெல்லாம் தூங்கவில்லை - வேங்கை
பலங் கண்டும் மயங்கவில்லை
பச்சை நிறப் பசுமை நிலை
பார்கூடப் பார்த்ததில்லை
பிரித்தாண்ட பெருமையோடு - ஈழ
பிரபாகரன் வேந்தனிங்கு!

# விடிவைக் கெடுப்பது விலங்கு

வானம், பூமி இரண்டிற்குமிங்கே. விலங்குண்டோ?
வாழும் உயிர்கள் எதுக்குமிங்கே விலங்குண்டோ?
அறிவு ஆறு இருந்தாலும் நாம் அடிமைதானே - அதை
அறியா நாமும் வாழ்வதும் பெரும் மடமைதானே!

காற்றுக்கும், மழைக்கும் தடையுமுண்டோ கேளு
கடலலை பயந்து ஓய்வதுமுண்டோ கேளு
இந்த தமிழினம் வாழ தடையுமேனுண்டோ - அதை
தடுப்பவன் கதையை முடிப்பதுதான் மேலு!

சிங்கள தேசம் பெரும் பூதம் - அது
விழுங்கவும் பார்க்குதே நம் தேசம்
இதை உணரா வாழ்ந்தார் எம்முன்னோர்
இன்று உதிரம் சிந்தி தடுத்தாரே. இளையோர்!

தலைவரின் உதயம் தனிச்சிறப்பு. - அதால்
கொடியவன் ஆட்சியில் பரபரப்பு
இதில் தாயகம் காண்பது நம் பொறுப்பு
மலரும் வாழ்வில் எம் களிப்பு!

# எமது ஆலயங்கள்

நல்ல காலம் இங்கு பிறந்திடும்
நம்ம கஸ்டமெல்லாம் பறந்திடும்
நாங்கள் மண்ணை ஆளும் காலம்
நாளை காண்பது தமிழீழ தேசம்!

பணத்துடன் வாழ்வது வாழ்க்கை இல்லை
மானத்துடன் வாழ்வதே மனித வாழ்க்கை
தமிழன் வரலாறு தனிப்பட்டதொன்று
தாயகம் காப்பதே தலத்தில் நன்று!

ஆயிரமாயிரம் உயிர்களை இழந்தும்
அலைந்து அடைந்ததிந்த விடுதலை
ஆருயிராய் நாம்பேணும் ஆயுதங்கள்
அன்னை பூமிக்கு கிடைத்தது ஆறுதல்!

தாயகம் மீட்ட தங்கங்களோ
தரணி போற்றும் தெய்வங்களாகும்
தனிச் சரித்திரமான காவியங்கள்
தமிழ் தேசத்தில் என்றும் ஆலயங்கள்!

# தமிழ் காத்த தலைவன்

நானில்லாமல் என் தலைவனிருக்கலாம்
தலைவனில்லாமல் நான் இருப்பேனோ?
நாமில்லாமல் நாடு இருக்கலாம்
நாடில்லாமல் நாம் இருப்போமா?

தமிழில்லாமல் பிறவி எடுக்கலாம்
பிறவியெடுத்தாலும் உணர்வு பிறக்குமோ?
உணர்வு உள்ளவன் தமிழனாகலாம் - தன்
மானம் கெட்டவன் தமிழனாவானோ?

சண்டை செய்து சாகடிக்கலாம்
சாகடித்தாலும் தமிழும் அழியுமோ?
தமிழீழ நிலைகள் அழியலாம் - தமிழ்
வளர்த்து வைத்த கலைகள் அழியுமோ?

யாகம் செய்யும் புலிகள் சாகலாம்
அவரீந்த தியாகம் சாகுமோ? - நம்
தமிழீழம் பிரபா ஆளலாம் - அவர்
இல்லா முத்தமிழும் வாழுமோ?


# தமிழின் பங்கு எனக்கும் உண்டு

தமிழிலும் மண்ணிலும் சத்தியம் செய்வேன்
தடுக்க வருவோரின் தலையை எடுப்பேன்
தார்மீகத் தலைவனை மனதினில் கொண்டு
தமிழீழம் காணவும் தயங்காது உழைப்பேன்!

கோழைகள் கூட்டத்தை சாலையில் பார்த்து
சங்காய் தமிழைக் காதில் ஒலிப்பேன்
தாயகம் ஒன்று தமிழுக்கு வேண்டும்
சபதம் செய்து காரியம் முடிப்பேன்!

அந்நிய நாட்டை தேடிய கூட்டம்
அலைந்தபின் வந்து அழுது கேட்கும்
அகதி முகாமிலே ஒன்றைக் காட்டி
அதிலே அவருக்கு இடமும் கொடுப்பேன்!

அண்ணன் ஆட்சியின் அழகைப் பார்த்து
விண்ணும் ஒருகணம் எண்ணியே வியக்கும் - இங்கு
விடிவு காட்டியே மடிந்த உயிரை - நம்
வீடுகள் தோறும் வணங்கச் செய்வேன்!



கண்ணெதிரே நிகழும் கொடுமைகண்டு,
தன்னினத்திற்கு வந்த இழிநிலைகண்டு
உண்மை மனிதன் சும்மா உட்கார்ந்திருக்க
மாட்டான்,
தான் அடிமைப் பட்டிருப்பதை அறிந்துகொண்டு
உள்ளே கவிதா நெருப்பெரியும் ஒருவன்
கைகட்டி நிற்கமாட்டான்,
விஜயக்கோனும் கைகட்டி நிற்கவில்லை—

— முன்னுரையிலிருந்து —